# தமிழ்

# சிகரம்

## முதல் பருவம்

### விடைகள்

# பாடம் – 1

# தமிழ் விடு தூது

## 1.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்க எண்: 4)

1. ஆ) 96
2. ஈ) அறியப்படவில்லை
3. இ) கலிவெண்பா
4. ஆ) சொல்லுதல்
5. அ) இரண்டு

#### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (பக்க எண்: 4)

1. தூது
2. கனி
3. அமுதம்
4. அன்னம்
5. மேகவிடுதூது

#### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண்: 4)

1. அன்னம், மயில், கிளி, மேகம், குயில், வண்டு

2. நெஞ்சுவிடுதூது, மேகவிடுதூது, கிள்ளைவிடு தூது போன்ற பல்வேறு தூது இலக்கியங்கள்.

3. முத்தமிழ் எனப்படுபவை இயல், இசை, நாடகம் ஆகும்.

#### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (பக்க எண்: 4)

1. எல்லாப் புலவர்களிடமும், அவர்களை நாடிவரும் கல்லாதவர்களிடமும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் எல்லோரிடமும் தமிழ் மொழி காணப்படுகிறது. தமிழைக் கண்டு துதித்தால் குறைகள் எல்லாம் நீங்கும் எனப் போற்றப்படுகிறது. இனிக்கும் தெளிவான அமுதமாகி அந்த அமுதினும் மேலான முத்தியைத் தரும் கனி

போன்ற தமிழ் எனவும், இயல், இசை, நாடகம் என்ற மூவகையான தமிழ் மொழியானது அறிவால் உண்ணப்படும் தேன் போன்ற தமிழாகவும் விளங்குகிறது.

(அல்லது)

தூது அனுப்புவோர் தூதுப்பொருளிடம் அதன் பெருமைகளைக் கூறித் தூது செல்ல வேண்டுவதை தூது நூல்களில் காணலாம். இந்தநூலிலும் தூதுவிடும் தலைவி, தூதுப் பொருளான தமிழின் பெருமைகளைப் புகழ்ந்து கூறுகின்றாள். தமிழ்மொழி அமிழ்தம் போன்று மிகவும் இனிமை உடைய மொழி. அறிவால் உண்ணப்படும் தேன் போன்ற இனிய மொழி தமிழ். சாவா மருந்தெனப் புகழப்படும் அமிழ்தம் கிடைத்தாலும் விரும்பேன்; அதனினும் சிறந்ததாக தமிழ் விளங்குகிறது; அதனால்தான் நான் உயிரோடு இருக்கிறேன் என்று தலைவி கூறுவதால் தமிழ் தரும் இன்பத்தின் மேன்மையை உணரலாம். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குகின்ற உன்னைக் கண்டு, உன் பொன் போன்ற அடிகளைப் புகலிடமாகக்கொண்டு போற்றுகின்றேன் என்று, தலைவி தமிழ் மொழியைப் போற்றுகின்றாள்.

## 1.3 படிப்போம்

# தமிழரின் கொடைத்தன்மை

### பயிற்சிகள்

#### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 7)

1. ஆ) இளங்குமணன்
2. அ) முதிரி
3. ஈ) நூறாயிரம்
4. ஆ) உடைவாள்
5. அ) குமணன்

#### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடைஎழுதுக. (பக்கம் எண்: 7)

1. பெருந்தலைச்சாத்தனார்.

2. இளங்குமணன், தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் உயிரெனப் போற்றிய அண்ணன் குமணினின் புகழைப் பொறுக்க இயலாத இயல்பையுடையவனாக இருந்தான். மேலும் குமணனைக் கண்டு இளங்குமணண் பொறாமையும் கொண்டான்.

3. குமணனின் புகழையும் பெருமையையும் கண்டு பொறுக்காத இளங்குமணன், குமணனின் தலையைக் கொய்து வருபவர்க்கு நூறாயிரம் பொற்காசுகள் வழங்கப்படும் என்று அறிவித்தான்.

4. பெருந்தலைச் சாத்தனார் குமண வள்ளலிடமிருந்து உடைவாளைப் பெற்றுச் சென்றார்.

5. தமிழ்ச் சமூகத்தில் அரசர்கள், புலவர்களுக்குப் பரிசளிப்பதில் வள்ளல்களாக விளங்கினர்.

### இ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 7)

1. பெருந்தலைச்சாத்தனார் இளங்குமணனை நோக்கி மன்னா, குமண வள்ளலிடம் பரிசில் பெறச் சென்றேன். அவர் தம்மிடம் பரிசளிக்க ஒன்றும் இல்லாததால், தன் தலையினைக் கொய்து, இளங்குமணனிடம் கொடுத்து நூறாயிரம் பொன்னைப் பரிசாகப் பெற்றுக்கொள் என்று தனது உடைவாளைத் தந்தார். அதைக் கேட்ட இளங்குமணன் மிகப்பெரிய தவறு இழைத்து விட்டேன் என்று மனம் வருந்தினார். அதைப்பார்த்த புலவர் மன்னா தங்கள் அண்ணன் நலமுடன் இருக்கிறார். தங்கள் தவறை உணர்த்தவே நான் இவ்வாறு கூறினேன் என்றார். மனம் திருந்திய இளங்குமணன் தன் தவற்றை உணர்ந்து தன் அண்ணனை மீண்டும் மன்னன் ஆக முடிசூட்டினான்.

2. குமணன் முதிரிமலைத் தொடரினை ஆட்சி செய்து வந்தார். அவர் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் தன் உயிரெனப் போற்றினார். காட்டிற்குச் சென்ற குமணனைக் காண பெருந்தலைச்சாத்தனார் சென்றார். அப்போது புலவரைக் கண்ட குமணன் தன்னிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. இது தாயை இழந்த துன்பத்தை விட பெருந்துன்பம் அளிக்கிறது என்றார். மேலும் என் தலையினைக் கொய்து இளங்குமணனிடம் கொடுத்தால் நூறாயிரம் பொன் பரிசாகக் கிடைக்கும். அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று குமணன் புலவரிடம் கூறினார். புலவருக்குப் பரிசளிக்கத் தன் தலையையே கொடுக்கத் துணிந்த குமணனின் கொடைப்பண்பு பெரிதும் போற்றுதற்குரியது.

## 1.4 மொழிக்கூறு

### பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 10)

1. மொழி முதல் எழுத்துகள்
2. பத்து

3. அ
4. பன்னிரண்டு
5. நான்கு

**ஆ) விடுபட்ட சரியான மொழி முதல் எழுத்தை எழுதுக. (பக்கம் எண்: 10)**

1. **க**ப்பல்
2. **வி**மானம்
3. **ப**தில் (வேறு சொல் எழுதினாலும் சரியே)
4. **சி**ங்கம் (வேறு சொல் எழுதினாலும் சரியே)

**இ) மொழிக்கு முதலில் வரும் உயிர், உயிர்மெய் எழுத்துகளை வட்டமிடுக.**

1. ஆ, கா
2. ய, மா
3. வீ, ஐ
4. ஞு, ஔ

**ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 10 )**

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

2. 'ச்' என்னும் மெய்யெழுத்து அ, ஐ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வராது.

3. 'ய்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் மட்டுமே மொழிக்கு முதலில் வரும்.
   எ.கா: ய – யவனர்; யா–யானை

4. 'வ்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ ஆகிய எட்டு உயிர் எழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

5. மெய்யெழுத்துகளுள் க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் ஆகிய பத்து மெய்யெழுத்துகள் மட்டுமே மொழிக்கு முதலில் உயிர் எழுத்துக்களுடன் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகளாக வரும்.

## 1.5 மொழியோடு விளையாடுவோம் (பக்கம் எண்: 11)

| மேலிருந்துகீழ்: | இடமிருந்துவலம்: |
|---|---|
| 1. குழந்தை<br>5. சக்கரம்<br>6. சிங்கம்<br>8. காலை | 1. தங்கம்<br>2. பந்து<br>7. காளை<br>10. மாம்பழம் |
| **கீழிருந்து மேல்:**<br>2. தலை<br>4. அம்பு<br>9. கடிகாரம் | **வலமிருந்து இடம்:**<br>1. குயில்<br>5. சங்கு<br>8. காகம் |

## 1.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் –விடைகள் (பக்கம் எண்: 12)

1. சார்லி சாப்ளின் மௌனப் படங்களைத் தயாரித்தார்.
2. அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் சாப்ளினிடம், "எல்லாரும் பேசும் படங்களைத் தயாரிக்கிறார்கள். நீங்கள் ஏன் மௌனப்படங்களையே தயாரிக்கிறீர்கள்?" எனக் கேட்டார்கள்.
3. சார்லி சாப்ளின் சிறந்த நகைச்சுவை நடிகர். அவரது படங்கள் இன்றளவும் எல்லோராலும் பார்த்து இரசிக்கப்படுகின்றன. அவரது நடிப்பும் நகைச்சுவையும் காலத்தால் அழியாதவை.
4. சார்லி சாப்ளின் தன் படங்களை மௌனப்படங்கள் எனக் கூறுவதை எதிர்த்தார். அவர், தன்னுடைய படங்கள் கூறும் செய்தி உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் புரிகின்றது. மேலும் என் திரைப்படங்கள், திரைக்கே உரிய மொழியில் பேசுகின்றன என்றார்.
5. சார்லி சாப்ளின் தம் படங்கள் உலகப் பொது மொழியில் பேசும் படங்கள் என்று கூறுகிறார்.

## 1.7 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 12)

Tamil is a classical language and one of the major languages of the Dravidian language family. It is spoken by Tamils in many countries like India, Sri Lanka, Malaysia, Singapore etc. This language is one of the longest surviving classical languages in the world. It has a rich literary and grammatical tradition.

திராவிட மொழி குடும்பத்தின் முக்கிய மொழிகளில் தமிழ் ஒரு செம்மொழி ஆகும். இது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் உள்ள தமிழர்களால் பேசப்படுகிறது. இந்த மொழி உலகிலேயே மிக நீண்ட காலமாக வாழும் செம்மொழிகளில் ஒன்றாகும். இம்மொழி மிகுந்த இலக்கிய மற்றும் இலக்கண மரபு வளங்களைக் கொண்டுள்ளது.

## 1.9 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் கவிதையைப் படித்து, அதன் உட்பொருளைக் கூறுக. (பக்கம் எண்: 13)**

### விரியும் மொட்டு

ஒவ்வொருவரும் ஒரு விசயத்தைப் பார்க்கும்போது வேறு வேறு விதமான உணர்வுகள் கொள்கின்றனர். நீரில் பூக்கும் அல்லி மலர் பூக்கும் விதத்தைப் பார்த்து ஆச்சரியம் கொள்கின்றனர். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும் செழுமையான நிறத்தைப் பெறுவதும் மற்றும் புதிய பரிமாணங்களை அடைவதும் அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. மற்றொருவர் இதனால் வியப்பு அடைவதில்லை. இதை கவிதை முறையில் சொன்னால் மூடிய மொட்டைப் போல இருப்பவர். இருந்தாலும் வேறோருவர் வியப்பு அடைவது கவிதை படிப்பதைப் போல, பூ விரிவதைப் போல வளமான உள்ளுணர்வை வெளிப்படுத்துகிறது. ஒருவர் கவிதையைப் படிப்பது போல மீண்டும் மீண்டும் படிக்கிறார்.

# பாடம் – 2

# பாரதிதாசன் கவிதைகள்

## 2.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 16)**

1. இ) உயிர்
2. ஆ) சுவடி
3. ஆ) தொண்டு
4. ஆ) இலக்கணம்
5. ஆ) செழுந்தமிழாய்ச்

**ஆ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக. (பக்கம்எண்: 17)**

| | | | |
|---|---|---|---|
| 1. | தரமுண்டு | = | தரம் + உண்டு |
| 2. | எம்முயிர் | = | எம் + உயிர் |
| 3. | தெளிவுறுத்தும் | = | தெளிவு + உறுத்தும் |
| 4. | செந்தமிழ் | = | செம்மை + தமிழ் |
| 5. | செழுந்தமிழ் | = | செழுமை + தமிழ் |

**இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 17)**

1. 'எங்கள் தமிழ்' என்னும் கவிதையில் தமிழ் மொழி உயிர் எனப் போற்றப்பட்டுள்ளது.

2. பாரதிதாசன் எழுதிய நூல்கள் குடும்ப விளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி பெற எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதப்பட வேண்டும். தமிழ் இலக்கண நூல்கள் புதிதாக இயற்றப்பட வேண்டும்.

4. உலகினில் புதிதாகத் தோன்றிய சிந்தனைகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் தமிழில் இடம்பெறச் செய்து தமிழைச் செழுமையாக்க வேண்டும்.

5. பாரதிதாசன் பாவேந்தர், புரட்சிக் கவிஞர் எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

**ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 17)**

1. பாரதிதாசன் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றின் காரணமாக தமிழ் மொழி நமக்கு எல்லாம் உயிர் போன்றது என்று பாடுகிறார். மேலும் தமிழ் மொழியின் வளம் குறைந்தால் தமிழ்நாடு எங்கும் இருள் சூழும். தமிழால் தான் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். ஆகையால் நாம் இன்பத் தமிழுக்கு நாளும் தொண்டு செய்வோம். தமிழ் எங்கள் மொழி என்று பெருமிதம் கொள்வோம். நல்ல தமிழ் வெல்ல வேண்டும் என நாள்தோறும் பாடி மகிழ்வோம் என்று தன் தமிழ்க் காதலை வெளிப்படுத்துகிறார்.

2. தமிழ் வளர்ச்சி

   எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
   இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
   வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
   விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம் கண்டு

   தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
   செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
   எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
   இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

3. கவிஞர்கள் கவிதைகளைத் தமது கருத்துகளின் உணர்ச்சி வெளிப்பாடாக வெளிப்படுத்துக்கிறார்கள். அக்கவிதையை மெருகேற்ற வெவ்வேறு இலக்கிய உத்திகளைக் கவிஞர்கள் பயன்படுத்துகின்றனர். "உள்ளத்து உள்ளது கவிதை; இன்பம் உருவெடுப்பது கவிதை" என்ற பாடலைக் கவிதைக்கு இலக்கணமாகத் தந்தவர் கவிமணி தேசிக விநாயகம். கவிதைகள் மக்கள் மனதில் எளிதில் பதியும் தன்மையுடையன.

**உ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 17)**

1. வளம்
2. பாரதிதாசன்
3. பாரதிதாசன் கவிதைகள்
4. கவிதை
5. வெட்கப்பட

## 2.3 படிப்போம்

# உலகத் தமிழ் மாநாடு

### பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (பக்கம் எண்: 19)**

1. தவறு
2. சரி
3. தவறு
4. சரி
5. சரி

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 19)**

1. முதல் உலகத் தமிழ் மாநாட்டின் குறிக்கோள் தொடர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுப் பாடல் அடியாகும்.

2. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது மெரினா கடற்கரையில் தமிழறிஞர்களான திருவள்ளுவர், ஔவையார், கம்பர், வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யு.போப், பாரதியார், பாரதிதாசன், கண்ணகி ஆகியோரின் சிலைகள் நிறுவப்பட்டன. இதனுடன் பண்பாட்டுச் சின்னங்களும் நிறுவப்பட்டன.

3. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் பயனாக மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கமும் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகமும் உருவாகின.

**இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 19)**

1. காலத்திற்கு ஏற்ப தமிழ் மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டே வருகிறது. அது கல்வெட்டு முதல் கணினி வரை தனக்கான இடத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. தமிழர்களாகிய நாம், பல்வேறு காரணங்களால் உலகமெங்கும் புலம்பெயர்ந்துள்ளோம். வாழிடத்தால் நாம் வேறுபட்டிருக்கிறோம். இருப்பினும் மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றிணைந்தே உள்ளோம். அதனால், மொழியையும் பண்பாட்டையும் காப்பது நம் கடமை. அதற்காக நடத்தப்படுவதே உலகத் தமிழ் மாநாடு ஆகும். உலகத் தமிழ் மாநாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் கலந்துகொள்வார்கள். இதில் ஒன்று கூடி தமிழ் வளர்ச்சி குறித்த திட்டங்கள் உருவாக்கப்படும். தமிழரின் பண்பாட்டுக்கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். மாநாட்டு

மலர் வெளியிடப்படும். ஒவ்வொரு மாநாடும் ஒரு குறிக்கோள் தொடரை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. இதுவே மாநாடுகளில் முன்னெடுக்கப்படும் முக்கிய பணிகள் ஆகும்.

அல்லது

மொழியும் பண்பாடும் தமிழர்களை ஒருங்கிணைக்கின்றன. இத்தகைய ஒருங்கிணைக்கும் கூறுகளில் உலகத் தமிழ் மாநாடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு மாநாடும் ஒரு குறிக்கோள் தொடரை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. உலகத்தமிழ் அறிஞர்களை ஒன்றிணைப்பதும், தமிழ் வளர்ச்சி குறித்த திட்டங்களை உருவாக்குவதும் உலகத்தமிழ் மாநாட்டின் முக்கியப் பணியாகக் கருதப்படுகின்றன.

## 2.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்க எண்:22)**

1. ஆ ) 3
2. இ) 11
3. ஈ) க், ச்

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண்:22)**

1. கிளவி, பதம், (பாடத்தில் இல்லாத கேள்வி) அல்லது 12

2. ஒரு சொல்லில் இறுதி எழுத்தாக இடம்பெறும் எழுத்துகள் மொழியிறுதி எழுத்துகள் ஆகும்.

3. I) மொழிக்கு இறுதியில் வரும் மெல்லின எழுத்து – ஞ்
   ii) மொழிக்கு இறுதியில் வரும் இடையின எழுத்து – ல்
   iii) விடுபட்ட மொழியிறுதி எழுத்தை நிரப்புக.
   1. மன்ன**ன்** 2. பாம்**பு** 3. அன்**னை**

இ) பின்வரும் கட்டங்களை நீங்கள் அறிந்த சொற்களைக் கொண்டு நிரப்புக. (பக்க எண்: 22)

| வ. எண் | உயிரீறு | மெய்யீறு | குற்றியலுகர ஈறு |
|---|---|---|---|
| 1. | சில | நாய் | கிழங்கு |
| 2. | மணி | தமிழ் | காசு |
| 3. | கிணறு | பல் | தட்டு |
| 4. | குறிஞ்சிப்பூ | கிண்ணம் | கம்பு |
| 5. | கலா | ஊர் | நேற்று |

## 2.5 கருத்து விளக்கப் படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 23)

1. கோலாலம்பூர்
2. மூன்று
3. 1989
4. சென்னை, மதுரை, தஞ்சாவூர்
5. நான்காம் உலகத்தமிழ் மாநாடு 1974 ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

## 2.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 25)

1. பி. ஆர். ராஜம்
2. திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு என்னும் ஊரில் பிறந்தார்.
3. இலக்கியத்தின் மீது ஆர்வம் இருந்தது.
4. விவேக சிந்தாமணி என்ற மாத இதழில் கமலாம்பாள் சரித்திரம் நாவலைத் தொடராக 3 ஆண்டுகளுக்கு எழுதினார்.
5. பிரபுத்தபாரதா என்ற ஆங்கில இதழ்

## 2.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 25)

புதுக்கவிதை படிப்பதற்கு எளிமையாகவும், வாசிப்பவர்களுக்கு எளிதில் புரிவதாகவும் இருக்க வேண்டும். இன்றைய இளம் தலைமுறையினரின் உணர்வு வெளிப்பாட்டு வடிவமாகப் புதுக்கவிதை அமைந்திருக்கிறது.

Modern poetry should be easy to read and easy to understand for the readers. Modern poetry has become a form of emotional expression for today's young generation.

## 2.9 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் பாரதிதாசனின் பாடலைப் படித்து, அதன் கருத்தை எழுதுக. (பக்கம் எண்: 26)**

### சிரித்த முல்லை

கவிஞர், மாலை நேரத்தில் ஒரு சோலைக்குச் செல்கிறார். அங்கு குளிர்ந்த தென்றல் காற்று வீசுகிறது. அந்த தென்றல் காற்றில் நறுமணம் (வாசம்) கமழ்கிறது. அந்த நறுமணம் (வாசம்) வந்த திசையில் திரும்பியதும், அங்கு சோலை நடுவில் பச்சைபுல்வெளி ஆடையாகக் கொண்ட படர்ந்து கிடந்த முல்லை மலர்க்கொடி ஒன்று பூத்து குலுங்குகிறது. அதனைக் கண்டு கவிஞர் மகிழ்ச்சி அடைகிறார்.

# பாடம் – 3

# திருக்குறள்

## 3.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. ( பக்கம் எண்: 29–30)**

1. ஆ) நோய்
2. ஈ) உரையாசிரியர்
3. இ) குறிப்பறிதல்
4. இ) 133
5. அ) ஊற்றுநீரும் மழைநீரும்

**ஆ) கீழே கொடுக்கப்பட்ட பெயர்களிலிருந்து திருக்குறள், திருவள்ளுவருக்கான பெயர்களை அட்டவணைப்படுத்துக. (பக்கம் எண்: 30)**

| திருக்குறள் | திருவள்ளுவர் |
|---|---|
| பொதுமறை | நாயனார் |
| வாயுறை வாழ்த்து | நான்முகனார் |
| தமிழ்மறை | பெருநாவலர் |
| முதுமொழி | செந்நாப்போதார் |
| பொய்யாமொழி | முதற்பாவலர் |
| முப்பால் | மாதானுபங்கி |
| பொருளுறை | தெய்வப்புலவர் |
| தெய்வ நூல் | பொய்யில் புலவர் |

**இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 30)**

1. மிகுந்த பசியும், தீராத நோயும், அழிவு செய்யும் பகையும் இல்லாத நாடே சிறந்த நாடாகும்.

2. திருக்குறள் மூன்று பிரிவுகளை உடையது. அவை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்.

3. தம் நாட்டின் தேவைக்குப் பிறநாட்டைச் சார்ந்திருக்கும் நாடு, நாடென்று கருதப்படாது.

4. ஊற்றுநீரும் மழைநீரும், வளம் வாய்ந்த மலைகளும், அந்த மலைகளிலிருந்து வருகின்ற நீரும், சிறந்த பாதுகாப்பு அரண்களும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவையாகும்.

5. திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இது குறள் வெண்பாக்களால் ஆனது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பிரிவுகளை உடையது. இதில் 9 இயல்களும் 133 அதிகாரங்களும் உள்ளன. அதிகாரத்துக்குப் பத்துக் குறள்கள் வீதம் 1330 குறட்பாக்கள் இந்நூலில் உள்ளன.

ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடைஎழுதுக. (பக்கம் எண்: 30)

1. திருவள்ளுவர், மிகுந்த பசியும், தீராத நோயும், அழிவு செய்யும் பகையும் இல்லாமல் நாடு இருக்க வேண்டும்; நாட்டிற்குக் கெடுதல் ஏற்பட்டால் அதனைச் சீர் செய்யும் அளவிற்கு வளம் குன்றாமல் இருக்க வேண்டும்; ஊற்று நீரும் ஆற்று நீரும், வளம் வாய்ந்த மலைகளும், அந்த மலைகளிலிருந்து வருகின்ற நீரும், சிறந்த பாதுகாப்பு அரண்களும் போன்ற இன்றியமையாத தேவைகளுடன் ஒரு நாடு வளமுடையதாக இருக்க வேண்டும்; மேலும் தனது தேவைக்காக எந்த நாட்டையும் சார்ந்தில்லாமல் இருத்தல் வேண்டும் என நாட்டின் சிறப்புகளாகக் கூறியுள்ளார்.

## 3.3 படிப்போம்

## கம்பராமாயணம் காட்டும் நாட்டு வளம்

### பயிற்சிகள்

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 32)

1. ஆ) கோசலம்
2. அ) முத்து
3. அ) பரம்படித்தல்
4. அ) நிலவளம்
5. ஈ) சங்கு

### ஆ) பொருத்துக. (பக்கம் எண்: 33)

| | | |
|---|---|---|
| 1. எருமை | – | செங்கழுநீர்மலர் |
| 2. அன்னம் | – | நெல்வயல் |
| 3. வண்டுகள் | – | சோலைகள் |
| 4. நீர்நிறைந்த இடம் | – | செம்பொன் |
| 5. சங்குகள் | – | மடைகள் |

### இ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (பக்கம் எண்: 33)

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடைஎழுதுக. (பக்கம் எண்: 33)

1. கோசல நாட்டு மக்கள், மனத்தில் எந்தக் குற்றமும் இல்லாத தூய்மையான உள்ளம் படைத்தவர்கள்.

2. கோசல நாட்டு மக்களிடம் சிறிதளவும் சினம் இல்லை; சினம் இல்லாத காரணத்தால் பெரிய குற்றங்கள் இல்லை; அதோடு நல்ல அறங்களையே செய்ததால் அவர்களிடம் தவறுகள் இல்லை.

3. நிலவளமும் நீர்வளமும் மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

4. நிலவளமே, நாட்டின் பல வளங்களைத் தீர்மானிக்கிறது.

5. கோசல நாட்டு மக்களிடம் எந்தக் குற்றமும் இல்லாததால் அவர்களுக்கு இயற்கையால் ஏற்படும் மரணம் தவிர இளம் வயது மரணம் இல்லை.

உ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 33)

1. **கம்பர் காட்டும் நாட்டுவளம்:**

கம்பர், கோசல நாடு குறித்துப் பாடும் போது, அங்கு மக்களிடம் எந்தக் குற்றமும் இன்மையால் அவர்களுக்கு இயற்கையால் ஏற்படும் மரணம் தவிர இளம் வயது மரணம் இல்லை. ஏனென்றால் அங்கு வாழ்வோர், மனத்தில் எந்தக் குற்றமும் இல்லாத தூய்மையான உள்ளம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மனத்தில் சிறிதளவும் சினம் இல்லை; சினம் இல்லாத காரணத்தால் பெரிய குற்றங்கள் இல்லை; அதோடு நல்ல அறங்களையே செய்ததால் அவர்களிடம் தவறுகள் இல்லை என்கிறார்.

## 3.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

அ) பொருத்துக. (பக்கம் எண்: 35)

1. பெயர்ச்சொல் – வனம்
2. வினையெச்சம் – பார்த்து
3. இடைச்சொல் – போல
4. உரிச்சொல் – நனி
5. வினைமுற்று – பார்த்தான்

ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 35)

1. ஆ) நான்கு
2. ஈ) ஆறு
3. ஆ) கடி
4. ஆ) இரண்டு

இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 36)

1. தனித்து இயங்காமல் பெயர்ச்சொல்லையோ வினைச் சொல்லையோ சார்ந்து வருவது இடைச்சொல் ஆகும். எ.கா அவர் + ஏ = அவரே (இங்கு "ஏ" என்னும் எழுத்து இடைச்சொல்லாக வந்துள்ளது.)

2. செய்யுளுக்கு மட்டும் உரிய சொல் உரிச்சொல். இது இரண்டு வகைப்படும். அவை ஒரு பொருள் தரும் பல உரிச்சொல், பலபொருள் தரும் ஓர் உரிச்சொல்.

3. ஒரு செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும். ஒரு செயல் முடிவு பெற்றால் அது வினை முற்று அல்லது முற்றுவினை என்பர். எ.கா: கேட்டான்.

4. பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும். பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் எனப் பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். எ.கா: புத்தகம், சென்னை.

5. இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

**ஈ) கீழ்க்காணும் சொற்றொகுதிகளிலுள்ள பெயர்ச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக. (பக்கம் எண்: 36)**

1. மேசை
2. கணினி
3. புத்தகம்
4. தமிழ்
5. மாதம்

**உ) உரிச்சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக. (பக்கம் எண்: 36)**

நனி, கடி, சால, தவ, உறு

**ஊ) பின்வரும் உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றைக் கண்டு வகைப்படுத்துக.**

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல் |
|---|---|---|---|
| தமிழ்நாட்டு மன்னர்கள் | வாழ்ந்து | வேளாண்மையும் | சாலச்சிறந்த |
| ஆட்சி | வளர்த்தனர் | வணிகமும் | நனிசிறக்க |
| புலவர்கள் | புரிந்தனர் | புலவர்களாக | |
| தமிழ் | உதவினர் | போற்றும் | |

## 3.5 மொழியோடு விளையாடுவோம்

**குறிப்புகளைக் கொண்டு சொற்கோபுரத்தை நிறைவு செய்வோம். (பக்க எண்: 37)**

1. போ
2. கண்
3. முல்லை
4. கம்பர்
5. மின்சாரம்
6. திருக்குறள்

## 3.6 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 38)**

1. ஒட்டக்கூத்தர்
2. துமி
3. ஒட்டக்கூத்தரும் கம்பரும் மன்னருடன் நகர்வலம் சென்றனர்.
4. 'துமி' என்னும் சொல்லின் பொருள் 'துளி' ஆகும்.
5. 'துமி' என்னும் சொல்லால் கம்பராமாயணம் நூலின் அரங்கேற்றம் நிறுத்தி வைக்கப்பட்டது.

## 3.7 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 38)

இயற்கை நமக்களித்த அற்புதப் படைப்புகளில் காடுகள் முதல் இடத்தைப் பெறுகின்றன. புவியின் மேற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடுகளே ஆகும். ஒரு நாட்டில் காட்டுவளம் செழிப்பாக இருந்தால் நாடு வளம் பெறும் காடுகளைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். உலக வெப்பத்தைக் குறைக்காமல் பசுமையைப் பேணவும் காடும் பெரிதும் உதவுகின்றன.

Forests rank first among the wonderful creations that nature has bestowed upon us. Forests cover one–third of the Earth's surface. If a country's forests are rich, the country will prosper. Protecting forests is the primary duty of each of us. Forests help more in reducing global warming and maintaining greenery.

## 3.9 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, எட்டு அடிகளில் பாடல் ஒன்றை எழுதுக.**

**வயல்வெளி கவிதை**

பச்சை பட்டாடை உடுத்தி
நிலமகள் சிரிக்கிறாள்
நெல் விளையும் வயல்வெளியை
காவல் காக்கும் மரங்கள்
மலைகளில் தவழ்ந்து
விளையாடும் மேகம்
இக்காட்சி காணக்கிடைக்கா
கண்கொள்ளா காட்சி.
அறுபத்து எட்டாயிரம் மட்டும்

# பாடம் – 4

# நாடு

## 4.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 43)**

1. ஈ) வெ. இராமலிங்கனார்
2. அ) அறிவு
3. இ) பத்ம பூஷண்
4. ஆ) என்கதை
5. ஆ) வெ. இராமலிங்கனார்

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடைஎழுதுக. (பக்கம் எண்: 43)**

1. தன் தாய்நாட்டு மக்கள் மூவுலகையும் ஆளும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்குகின்றனர் என்று கவிஞர் வெ.இராமலிங்கனார் கூறுகிறார்.

2. தமிழ்நாடு அரசு வெ. இராமலிங்கனாரை அரசவைக் கவிஞராக நியமித்து கௌரவித்தது. இந்திய அரசு இவருக்குப் பத்ம பூஷண் விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

3. என்கதை, அவளும் அவனும், மலைக்கள்ளன், சங்கொலி போன்ற நூல்களை இராமலிங்கனார் இயற்றியுள்ளார்.

4. விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம்

5. பொருள் தருக
    1. தேசம் – நாடு
    2. தானம் – ஈதல்
    3. தவம் – வருந்தித் துறத்தல்
    4. தருமம் –அறம்

இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 43)

1. தம் தாய்நாடு நிலவளமும், நீர்வளமும் நிரம்பப் பெற்றிருக்கிறது, தன் நாட்டைப் போன்று நீண்ட நிலப்பரப்பு மிக்க நாடு வேறில்லை; இந்நாட்டில் மக்களுக்குரிய மதிப்பும், உற்பத்திப் பொருள்களும் மிகுதியாகக் கிடைக்கின்றன. இந்த நாட்டில் உள்ள நாற்பது கோடி குடிமக்களும் மூவுலகையும் ஆளும் ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். இது போன்று பல அற்புத வளங்களைக் கொண்ட நாடானது வளங்களைச் சுரண்ட வந்தவர்களையும், வறுமையென வந்தவர்களையும் பிறநாட்டினர் என எண்ணாது அவர்களை வாரியணைத்து தம்மக்கள் போல் பாதுகாத்து தன்னுடைய உயர்குணத்தை வெளிப்படுத்தியது. இவ்வளவு வளங்களும் கொண்ட இந்நாடு அறிவும், கலைகளும் நிலைத்துத் தங்கியிருக்கும் இருப்பிடமாகவும் உலக நாகரிகத்தின் பிறப்பிடமாகவும் திகழ்கின்றது. மேலும் 'தானம், தவம் இரண்டும் தவறாது நடைபெறச் செய்த கைகளால் அறச்செயல் அனைத்தையும் நடைபெறச் செய்த்து' எனக் காந்தியக்கவிஞர், தன் நாட்டின் வளத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## 4.3 படிப்போம்

## பிரேசில்

### பயிற்சிகள்

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம். (பக்க எண்: 45)

1. ஈ) வடக்கு
2. இ) பீலே
3. ஆ) கோதுமை
4. ஈ) போர்ச்சுக்கீசியம்

ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (பக்கம்எண்: 45)

1. சரி
2. சரி

இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக . (பக்கம் எண்: 45)

1. அமேசான் ஆறு, அமேசான் காடு

2. கரும்பு, சோயா பீன்ஸ், கோகோ பீன்ஸ், காஃபி, பருத்தி, அரிசி, வெப்ப மண்டலப் பழங்கள் ஆகியவை பிரேசிலின் வேளாண் உற்பத்திப் பொருள்கள் ஆகும்.

3. பிரேசில் மக்களின் தனிச்சிறப்பு மிக்க கலைகள் மட்பாண்டக் கலைகள் மற்றும் ஓவியக் கலைகள் ஆகும்.

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 42)

1. பிரேசில் நிலப்பரப்பின் அடிப்படையில் உலகின் ஐந்தாவது மிகப்பெரிய நாடாக விளங்குகின்றது. இந்நாட்டின் வடக்கே உலகின் மிகப்பெரிய காடான அமேசான் காடு அமைந்துள்ளது. இங்கு பாய்கின்ற அமேசான்ஆறு நூற்றுக்கணக்கான நீர் வழிகளின் சங்கமமாகத் திகழ்கின்றது. இங்குள்ள வனப்பகுதிகளில் பலவிதமான விலங்கினங்களும், ஆறுகளில் பல அரியவகை மீன் இனங்களும் காணப்படுகின்றன. பலவிதமான மண்வகைகளைக் கொண்டுள்ள இந்த நாட்டில் கரும்பு, மரப்பால், சோயா பீன்ஸ், கோகோ பீன்ஸ், காஃபி, பருத்தி, அரிசி மற்றும் வெப்ப மண்டலப் பழங்கள் போன்றன விளைவிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் பெருமளவு வருமானத்தைப் பெறுகின்றது. மேலும் வேதிப்பொருள்கள், உரங்கள், இரும்பு சாதனங்கள், விமானம் மற்றும் கார் உற்பத்தியில் தன்னிகரற்று விளங்குகின்றது. எனவே தென்அமெரிக்காவின் தொழில் உற்பத்தி மையமாக பிரேசில் திகழ்கின்றது. இவ்வாறாக மக்கள் வாழ்வதற்கான அனைத்துக் கட்டமைப்புகளும் கொண்ட நாடாக பிரேசில் விளங்குகின்றது.

## 4.4 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம். (பக்கம்எண்: 48)

1. ஆ) 1–ஆ, 2–இ, 3–ஈ, 4–அ
2. இ) 4
3. ஆ) படித்தான்
4. இ) தெலுங்கு
5. அ) வடசொல்

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 48)**

1. இலக்கிய வகைச் சொற்களை நான்கு வகையாகப் பகுக்கலாம். அவை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்.
2. பிற மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும்.
   எ.கா: வாடகை
3. வடமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் தமிழ்ச்சொற்கள் போன்றே மாற்றமின்றி வருவது தற்சமம் எனப்படும்.
   எ.கா: காரணம், குங்குமம்

**இ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (பக்கம் எண்: 48)**

1. திரிசொல் கற்றவர் மட்டும் பொருள் உணர்ந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ள சொல் திரிசொல் எனப்படும்.
   எ.கா: பீலி, வினவினான்

இதில் 'பீலி' என்பது மயில் தோகை, வினவினான் என்பது கேட்டான் என்று பொருள்படும். இதனைக் கற்றவர் மட்டுமே புரிந்து கொள்வர். அதனால் இச்சொற்கள் திரிசொற்கள் ஆகும்.

**திரிசொல் வகைகள்**

திரிசொல் இரண்டு வகைப்படும். அவை பெயர்த் திரிசொல், வினைத் திரிசொல்

**ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்**

தத்தை, கிள்ளை, அஞ்சுகம் ஆகியவை கிளி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் பல பெயர்த் திரிசொற்களாகும்.

**பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்**

ஆழி என்பது கடல், மோதிரம், சக்கரம், வட்டம் போன்ற பல பொருளை உணர்த்தும் ஒரு பெயர்த் திரிசொல் ஆகும்.

**ஒரு பொருள் குறித்த பல வினைத்திரிசொல்**

செப்பினான், உரைத்தான், மொழிந்தான், இயம்பினான் ஆகியவை சொன்னான் என்னும் ஒரே பொருளை உணர்த்தும் பல வினைத்திரிசொற்களாகும்.

**பலபொருள்குறித்தஒருவினைத்திரிசொல்**

வீசு என்பது எறி, சிதறு, பரவச்செய், ஆட்டு போன்ற பல பொருளை உணர்த்தும் ஒரு வினைத் திரிசொல் ஆகும்.

## 4.5 கருத்து விளக்கப் படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 49)

1. தமிழ் இணையக் கல்விக்கழகம்
2. 24 மொழிகள்
3. 22 நாடுகள்
4. பல்லூடகப் பயிற்சிகள், வாசிப்புடன் கூடிய நூல்கள், அசைவூட்டும் காணொலிகள், மின் அட்டைகள், காணொலிப் படங்கள், ஒலிப் புத்தகங்கள்

## 4.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 50)

1. நாமக்கல் வெ. இராமலிங்கனார்

2. சிம்சன் இறந்து போன தன் ஒரே குழந்தையின் படத்தைக் கவிஞரிடம் தந்து ஓவியமாக வரையச் சொன்னார்.

3. சிம்சன் ஓவியத்திற்கு தருவதாகச் சொன்ன பணம் ஐம்பது ரூபாய். ஆனால் அவர் 675 ரூபாயை பரிசாகக் கொடுத்தார்.

4. சிம்சன் தம் குழந்தையின் ஓவியம் உயிர்த்துடிப்போடு இருந்ததாகக் கூறினார்.

5. சிம்சன் ஓவியத்திற்கு ஐம்பது ரூபாய் பரிசு தருவதாகச் சொன்னார். ஓவியத்தைப் பார்த்த சிம்சன் கவிஞரைப் பாராட்டி, ஒரு கட்டு நோட்டை உருவி கவிஞரிடம் கொடுத்தார். நோட்டுகளை எண்ணிப் பார்த்த கவிஞர் 675 ரூபாய் இருப்பதைப் பார்த்து வியந்து இவ்வளவு அதிகமாகக் கொடுத்திருக்கிறாரே எனச் சந்தேகித்து அந்த நோட்டுகளை அப்படியே மேஜை மேல் வைத்தார். இந்நிகழ்வு கவிஞரின் நேர்மை மாறாக் குணத்தை விளக்குகிறது.

## 4.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 51 )

Human migration is the movement by people from one place to another with the intention of settling temporarily or permanently in the new location. The movement is typically over long distances and from one country to another, but internal migration is also possible. Migration may be as individuals, family units or large groups.

மனிதன் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் புலப்பெயர்வு என்பது ஒரு புதிய இடத்தில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ குடியேறும் நோக்கத்துடன் நிகழ்கிறது. இந்த இடம்பெயர்வு பொதுவாக நீண்ட தூரங்களுக்கும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கும் என்ற வகையில் இருக்கும், ஆனால் ஓர் ஊரிலேயே புலப்பெயர்வும் சாத்தியமாகும். இத்தகைய புலப்பெயர்வு தனி நபராகவோ, குடும்பமாகவோ அல்லது பெரிய குழுக்களாகவோ இருக்கலாம்.

## 4.9 உயர்நிலைத் திறன்

**'நாடு' என இறுதியில் முடியும்படி, மூன்று சீர் கொண்ட பாடல் உருவாக்குக. (ப.எண். 51)**

நான் வாழும் நாடு

நல்ல வளமுடைய நாடு

நல்ல நதிகள் பாயும் நாடு

பெரிய மலைகள் கொண்ட நாடு

ஆன்றோர் வாழும் நாடு

சான்றோர் வாழும் நாடு

# பாடம் – 5

# தனிப்பாடல்

## 5.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம். (ப.எண்.54)**

1. (அ) வாசல்
2. (ஈ) நற்குடியினர்
3. (ஆ) உபசரியார், உண்ணாமை

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண். 54)**

1. கம்பர், காளமேகப் புலவர், ஔவையார், இராமசந்திரன் கவிராயர் முதலான பல்வேறு புலவர்களால் வெவ்வேறு காலங்களில் தனிப்பாடல்கள் பாடப்பட்டன.
2. ஔவையார், தனிப்பாடலில் பண்பட்ட நற்குடியில் பிறந்தவரோடு உறவைப் பேண வலியுறுத்துகிறார்.
3. சொன்ன சொல்லிலிருந்து தவறாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும்.
4. பிற்காலத்தில் தொகுக்கப்படாமல் இருந்த பல பாடல்களைத் தொகுத்து அவற்றைத் 'தனிப்பாடல் திரட்டு' என்று அழைத்தனர்.
5. உறவுகளைப் பற்றிய ஔவையாரின் பாடல்

   மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
   மிதியாமை கோடி பெறும்;
   உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
   உண்ணாமை கோடி பெறும்;
   கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மொடு
   கூடுதல் கோடி பெறும்;
   கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
   கோடாமை கோடி பெறும்.

இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. தம்மை மதியாதவர் வீட்டிற்குச் செல்லாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும். 'உண்ணுங்கள்! உண்ணுங்கள்!' என்று அழைக்காதவர்களின் வீட்டில் உணவு உண்ணாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும். கோடி செல்வத்தைக் கொடுத்தாவது பண்பட்ட நற்குடியில் பிறந்தவரோடு சேர்ந்து இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும். கோடி செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் சொன்ன சொல்லிலிருந்து தவறாமல் இருப்பது கோடி செல்வம் பெற்றதற்குச் சமமாகும் என ஔவையார் குறிப்பிடுகிறார்.

## 5.3 படிப்போம்

# பண்படுத்தும் பழமொழிகள்

### பயிற்சிகள்

அ) கீழ்க்காணும் தொடர்களில் சரியான தொடரைக் கண்டறிக. (பக்கம் எண்.58)

1. தவறு
2. சரி
3. தவறு
4. தவறு
5. சரி

ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்.58)

1. முன்னோர்களின் அனுபவமே பழமொழிகளாகத் திகழ்கின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பழமொழிகள் வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகவும் தவறு செய்யாமல் நேர் வழியில் செல்லவும் நம்மை வழிநடத்தும். பழமொழி கூறும் கருத்தின் ஆழத்தினை உணர்ந்து அவற்றை நாம் பயன்படுத்தினால் அவை நம்மை பண்படுத்தக்கூடியவையாகும்.

2. அக்காலத்தில் உள்ள மருத்துவமுறையானது இயற்கை முறையை சார்ந்ததாக இருக்கும். மூலிகை தாவரங்கள் கொண்டே மருத்துவம் செய்யப்பட்டன. அக்காலத்தில் மருத்துவன் பார்க்கும் ஒருவன் வைத்தியத்திற்கு உரிய ஆயிரம் வேர்களை அதாவது தாவரங்களை அறிந்து வைத்துள்ளானோ அவனே அரை வைத்தியன் ஆவான் என்பது இப்பழமொழியின் விளக்கமாகும்.

**இ) கலைந்துள்ள சொற்களில் மறைந்திருக்கும் பழமொழியைக் கண்டுபிடிக்க. (பக்க எண்.58)**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அகல உழுவதைவிட ஆழ உழு.
3. ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு.
4. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
5. தனி மரம் தோப்பு ஆகாது.

**ஈ) விடுபட்ட சொற்களைக் கண்டுபிடித்துப் பழமொழியை நிறைவு செய்க. ( ப. எண்.58)**

1. இக்கரைக்கு **அக்கரை** பச்சை
2. **ஐந்தில்** விளையாதது ஐம்பதில் வளையாது
3. தனிமரம் **தோப்பு** ஆகாது.
4. பசி வந்தால் பத்தும் **பறந்து** போகும்.
5. **ஆழம்** தெரியாமல் காலை விடாதே.

## 5.4 தெரிந்துகொள்வோம்

**பயிற்சிகள்**

**அ) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.60)**

1. (இ) க் ச் த் ப்
2. (ஈ) எட்டுப் பேர் மேற்குத் திசையில் சென்றதாகக் கூறினர்.
3. (அ) எல்லோரும் ஒற்றுமையாக**க்** கூடி வளங்களை**ச்** சமமாக**ப்** பகிர்ந்து வாழும் வாழ்க்கையே சமூக வாழ்க்கை
4. (ஆ) மனிதன் நாகரிகம் பெற தொடங்கிய காலத்திலிருந்தே தன்னை**க்** காத்துகொள்ள சமூக உறவை அடிப்படையாக**க்** கொண்டான்.

**ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக. (ப. எண். 60)**

1. வல்லெழுத்துக்களில் உள்ள க், ச், த், ப் ஆகிய நான்கு மெய்களுள் ஒன்று வருமொழி முதலில் வந்து நிலைமொழியின் ஈற்றோடு புணரும்போது சில சூழல்களில் ஒற்று மிகும். இதை வல்லினம் மிகுதல் என்பர்.
   சான்று : தமிழ் + காதல் = தமிழ்**க்**காதல்

2. ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வல்லினம் மிகும் இடங்களுக்குச் சான்று : நூலைப்படி, பாலைக்குடி.

நான்காம் வேற்றுமை உருபு வல்லினம் மிகும் இடங்களுக்குச் சான்று : பள்ளிக்குச் சென்றான், பாரதிக்குப் பரிசு.

## 5.5 மொழியோடு விளையாடுவோம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்துகளை வைத்துக் குறைந்தது பத்து சொற்களை உருவாக்குக. (ப. எண்.61)**

1. சிலை
2. மலை
3. இலை
4. கலை
5. கல்
6. பாலை
7. சிம்மம்
8. இமயம்
9. இயல்
10. பாகம்
11. பாலம்
12. பாவை
13. இறகு
14. கயல்
15. நகம்
16. சிறகு
17. பால்
18. இமயமலை

## 5.6 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 62)**

1. 'அவ்வை' என்பது 'அம்மை' என்ற சொல்லின் திரிபு ஆகும்.
2. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு.
3. ம.பொ. சிவஞானம்.
4. கம்பனிடம் சொற்போர் நடத்திய ஔவையார், பிற்காலச் சோழனின் ஆட்சியில் வாழ்ந்தவர் ஆவார்.
5. ஆத்திசூடி

## 5.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 63)

வாழ்க்கை அனுபவங்களின் வெளிப்பாடுகளே பழமொழிகள். அவை ஒரு சமுதாயத்தின் அறிவுக்கூர்மையை எடுத்து விளக்குவதாக அமைகின்றன. பழமொழிக்கு இரண்டு இன்றியமையாப் பண்புகள் உள்ளன. ஒன்று சுருக்கம் மற்றும் செறிவு. மற்றொன்று மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் தன்மை.

Proverbs are expressions of life experiences. They capture and explain the wisdom of a society. A proverb has two essential characteristics. One is brevity and concentration; the other is its applicability in the daily lives of people.

## 5.9 உயர்நிலைத் திறன்

**மேற்கண்ட நுண்கதைக்குப் பொருத்தமான பழமொழியைத் தேர்ந்தெடுக்க.**

2. சிறு துளி பெருவெள்ளம்.

## 5.10 செயல்திட்டம்

**'அ' என்னும் எழுத்தில் தொடங்கும் பத்து தமிழ்ப் பழமொழிகளை எழுதி வருக.**

1. அக்கரைக்கு இக்கரை பச்சை.
2. அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.
3. அடியாத மாடு படியாது.
4. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
5. அவசகாரனுக்குப் புத்தி மட்டு.
6. அழுகிற பிள்ளை பால் குடிக்கும்.
7. அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையாது.
8. அடி மேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும்.
9. அடிக்கிற கைதான் அணைக்கும்.
10. அரசன் எவ்வழியோ குடியும் அவ்வழி.

# பாடம் – 6

# பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்

## 6.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப. எண். 67)

1. (இ) காற்று
2. (அ) கவிஞாயிறு
3. (ஈ) கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்

#### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப. எண். 67)

1. தாராபாரதி, 'புதிய விடியல்கள்', 'இது எங்கள் கிழக்கு', 'விரல்நுனி வெளிச்சங்கள்', 'பூமியைத் திறக்கும் பொன்சாவி', 'இன்னொரு சிகரம்' போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

2. 'பூமியின் முற்றம் முழுவதும் சுற்றம்' என்னும் கவிதையில் நதி, காற்று, சூல்மேகம், மரம் போன்ற இயற்கைப் பொருள்கள் சான்றாகக் காட்டப்படுகின்றன.

3. தாராபாரதி அவர்களின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். 'கவிஞாயிறு' என்னும் சிறப்புப்பெயரால் இவர் அழைக்கப்படுகிறார். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல்நுனி வெளிச்சங்கள், பூமியைத் திறக்கும் பொன்சாவி, இன்னொரு சிகரம் போன்ற நூல்களை இவர் எழுதியுள்ளார்.

#### இ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக. (ப.எண்.67)

1. நாடுவிட்டு நாடு செல்லும் நதிகளை எவரேனும் நாடு கடத்தியதுண்டா? வேற்று நாட்டுப்பக்கம் வேலி தாண்டி செல்கிறது என்று காற்றினைக் கைது செய்ததுண்டா? மேலூரில் மழையைப் பொழிந்துவிட்டு கீழூரில் பெய்ய வரும் நீர் கொண்ட மேகத்தை எல்லைச்சுவர்கள் தடுத்ததுண்டா? எல்லையில் நிற்கும் மரங்கள் அண்டை நாட்டின் நீரைக் குடிப்பதால் அவற்றின் வேர்களை வெட்ட முடியுமா? என் எல்லை

இதுவென்று ஏன் எண்ணுகிறாய் தோழா? அனைவரும் பொது என்ற இலக்கோடு எழுச்சிகொள்! எழுந்து நில்! என்ற செய்திகளை தாராபாரதியின் கவிதை வழியே அறியலாம்.

## 6.3 படிப்போம்

## ஆதிச்சநல்லூர்

### பயிற்சிகள்

#### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.70)

1. (ஆ) அகழாய்வு
2. (அ) பாண்டியர்
3. (ஆ) தாமிரபரணி
4. (ஆ) 178

#### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.70)

1. தவறு
2. தவறு
3. சரி
4. சரி
5. தவறு

#### இ) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக. (ப.எண்.69)

1. தமிழ்நாட்டில் முதுமக்கள் தாழி உள்ள தொல்லியல் தலங்களில் மிகவும் பாதுகாக்கப்பட்ட நிலையில் இருப்பது ஆதிச்சநல்லூர்தான். இங்கு 178 முதுமக்கள் தாழிகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கை சார்ந்த பல அடையாளங்களை முதுமக்கள் தாழிகளுக்குள் விட்டுச்சென்றுள்ளனர்.

2. ஆதிச்சநல்லூரில் பெரும் எண்ணிக்கையில் இரும்புப்பொருள்களும் குறைந்த எண்ணிக்கையில் தாமிரப்பொருள்களும் கிடைத்திருக்கின்றன. இரும்புப் பொருள்களைப் பொறுத்தவரை உழுவதற்கான கருவிகள், ஆயுதங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

3. ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வுப் பணியில் முதல்முறையாக சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் இரண்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில், கடல் ஆமைகளின் உருவமும், மரம், யானை, மீன் ஆகியவற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

4. தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் ஆதிச்சநல்லூர் புதைமேடு அமைந்துள்ளது.

5. ஆதிச்சநல்லூர் அகழாய்வுத் தளத்தை முதலில் உலகறியச் செய்தவர் பெர்லினைச் சேர்ந்த எஃப் ஜகோர்.

**ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. – ப.எண்.70**

வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கைமுறையை அறிவதற்கு அகழாய்வுகள் பெரிதும் உதவுகின்றன. தமிழ்நாட்டின் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமது பழந்தமிழர் வரலாற்றை அறிய பெரிதும் துணை நிற்கிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் ஆதிச்சநல்லூர் புதைமேட்டில் முதன் முதலில் ஆராய்ச்சி செய்தவர் பெர்லினைச் சேர்ந்த எஃப். ஜமகதார். பின்னற் அலெக்சாண்டர் ரியா பெரிய அளவிலான அகழாய்வுகளை மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் முதுமக்கள் தாழி உள்ள தொல்லியல் தலங்களில் மிகவும் பாதுகாக்கப்பட்ட நிலையில் இருப்பது ஆதிச்சநல்லூர்தான். இங்கு 178 முதுமக்கள் தாழிகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கை சார்ந்த பல அடையாளங்களை முதுமக்கள் தாழிகளுக்குள் விட்டுச்சென்றுள்ளனர்.
ஆதிச்சநல்லூரில் பெரும் எண்ணிக்கையில் இரும்புப்பொருள்களும் குறைந்த எண்ணிக்கையில் தாமிரப்பொருள்களும் கிடைத்திருக்கின்றன. இரும்புப் பொருள்களைப் பொறுத்தவரை உழுவதற்கான கருவிகள், ஆயுதங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வுப் பணியில் முதல்முறையாக சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் இரண்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில், கடல் ஆமைகளின் உருவமும், மரம், யானை, மீன் ஆகியவற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூர் புதைமேட்டில் கிடைக்கும் சான்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கைமுறை, கலை, பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய உதவு கருவூலமாக உள்ளன். இங்கே கிடைத்த சான்றுகள் சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கபடுகின்றன.

## 6.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக. (ப.எண்.72)**

1. (ஆ) எட்டுப்போர்
2. (ஆ) தமிழ்ப்புத்தகம்
3. (இ) அனைத்தும் சரி

**ஆ) கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் கூறுக.**

அ) மாணக்கருக்குக் கொடுக்க வேண்டும். வல்லினம் மிகும். 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு.

ஆ) பழங்களைப் பறிக்காதீர்கள். வெளிப்படையாக வரும். வல்லினம் மிகும். 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு.

இ) சுடுசோறு எங்கு கிடைக்கும்? வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஈ) அரசு ஆணை பிறப்பித்தது. சரியான வாக்கியம். எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.

உ) தாய்தந்தை. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

ஊ) வேலையில்லாப் பட்டதாரி. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

எ) கொடுகொடு. அடுக்குத்தொடரில் வல்லினம் மிகாது.

## 6.5 கருத்து விளக்கப் படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 74)

1. தமிழ் பிராமி எழுத்து வடிவம்
2. தமிழ் பிராமி எழுத்துகளை தமிழி என்றும் பண்டைத் தமிழ் எழுத்துகள் என்றும் அழைத்தனர்.
3. பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன்
4. கீழடி அகழாய்வு
5. குவிரன் ஆத(ன்), ஆதன்

## 6.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 75)

1. பாறை ஓவியங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்களால் செதுக்கப்பட்டவை.
2. புதிய கற்காலம் (doubt)
3. கரிக்கையூர் ஓவியங்கள்
4. கரிக்கையூர் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
5. சில சென்டி மீட்டர் அளவில் உள்ள சிறுவடிவ ஓவியங்கள் முதல் பெரிய அளவிலான பாறை ஓவியங்கள் வரை கரிக்கையூரில் காணக்கிடைக்கின்றன.

## 6.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 76 )

மனிதன் விட்டுச்சென்ற தொல் எச்சங்களை ஆராய்ந்து பண்பாட்டை அறிந்து கொள்வது தொல்லியல் எனைப்படும். இதில் பழங்காலத்தைப் பற்றி அறிய உதவும் கருவிகள், கல்வெட்டுகள், பொருள்கள் பற்றிய ஆய்வு செய்வர். அகழாய்வுகள் மூலமாகத்ததான் தொல்லியல் கண்டுபிடிப்புகள் கிடைக்கின்றன. அகழாய்வுகளை நிலத்திலும் குகைகளிலும் நீருக்கடியிலும் செய்யலாம்.

Archaeology is the study of culture by examining the remains left behind by humans. In this, they will study tools, inscriptions, and objects that help them learn about ancient times. Archaeological discoveries are made through excavations. Excavations can be done on land, in caves, and underwater.

## 6.9 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் வட்ட வரைபடத்தைப் புரிந்துகொண்டு, வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண்: 77)**

**வினாக்கள் – விடைகள்**

1. 19%.
2. ஒவியக் காட்சியகம்.
3. 22%.
4. பழங்காலப் பொருள் காட்சியகம்.
5. 32%.

# பாடம் – 7

# முத்தொள்ளாயிரம்

## 7.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (ப.எண்.80)

1. (ஆ) வயல்
2. (இ) சேர நாடு
3. (ஆ) வெண்பா
4. (இ) 108

#### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. ப.எண்.80

1. சேர நாடு சேறு நிறைந்த வயல்களை உடையது. அவ்வயல்களில் அரக்கு நிறம் கொண்ட செவ்வல்லி மலர்கள் பூத்துள்ளன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்துவிட்டது என்று அஞ்சின.

2. சேர மன்னன் கையிலேந்திய வேலில் நஞ்சு பூசப்பட்டிருக்கும். இதனால் பகைவர் மன்னனின்மீது பேரச்சம் கொண்டுள்ளனர்.

3. சேரர், சோழர், பாண்டியர்

#### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. – ப.எண்.80

1. சேரநாடு சேறு நிறைந்த வயல்களை உடையது. அவ்வயல்களில் அரக்கு நிறம் கொண்ட செவ்வல்லி மலர்கள் பூத்துள்ளன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்துவிட்டது என்று அஞ்சின. தம் குஞ்சுகளைத் தியிலிருந்து காப்பாற்ற நினைத்து தம் சிறகுகளால் படபடவென அடித்து அவற்றை அணைத்துக் கொண்டன. இந்த ஆரவாரம் தவிர, மக்கள் துயர் மிகுதியால் செய்யும் ஆரவாரத்தைச் சேர நாட்டில் காண்பது அரிது. ஆகையினால் மிகுந்த வளமும் பாதுகாப்பு கொண்டது சேரநாடு.

## 7.3 படிப்போம்

# கடல்சார் வாழ்க்கை

### பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.83)

1. (ஈ) நெய்தல்
2. (அ) கீழைக்காற்று
3. (ஆ) புன்னை
4. (இ) பரதவர்
5. (ஆ) தங்கை

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.83)

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.83)

1. கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலமாகும்.

2. மணமிக்க நெய்தல் மலர்களைக்கொண்டு தங்கள் இல்லங்களை அழகுபடுத்தினர்.

3. நெய்தல் நில மக்களுக்கு அதிகளவு உணவாகப் பயன்படுவது மீன் ஆகும். உப்புக்கு மாற்றாகப் பெற்ற நெல்லைக் கொண்டு அரிசியாக்கிச் சேர்த்து சமைத்து உண்டனர். அதற்கு அயிரை மீன் புளிக்குழம்பும் கருவாட்டுப் பொரியலும் சேர்த்துக் கொண்டனர். நெய்தல் நில மகளிர் அழகிய பூக்களுடன் கூடிய, பசுமையான தழை உடையினை உடுத்தினர்.

4. நெய்தல் நில மக்களின் குடிசைகளின் மேற்பகுதி புல், முள்ளிச்செடி, தாழை ஆகியவற்றால் அமைக்கப்பட்டிருக்கும். குடிசைகளின் முன்பகுதிகளில் ஓலைகளுடைய பனைமரங்கள் காணப்படும். இப்பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீட்டிற்கு வேலி அமைத்து வாழ்ந்தனர்.

5. நெய்தல் நிலத்தினரின் முதன்மைத்தொழில் மீன் பிடித்தல் ஆகும். பிடித்த மீன்களை மணற்பரப்பில் காய வைத்து விற்றனர். கடல் நீரைத் தேக்கி உப்பு தயாரித்தல். கடலிலிருந்து கிடைத்த முத்து, பவளம், சங்கு முதலிய பொருள்களைக் கொண்டு அழகிய வேலைப்பாட்டுன கூடிய அணிகலன்களைச் செய்தல் முதலான தொழில்களை செய்தனர். கடல் வணிகம் செய்வதிலும் சிறந்து விளங்கினர்.

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. – ப.எண்.83

1. கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலமாகும். நெய்தல்நில மக்களுக்குக் கடல் முக்கிய ஆதாரமாக இருந்தது. கடல்சார்ந்த வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர். நெய்தல் நில மக்களுக்கு அதிகளவு உணவாகப் பயன்படுவது மீன். உப்புக்கு மாற்றாகப் பெற்ற நெல்லைக் கொண்டு அரிசியாக்கிச் சேர்த்து சமைத்தனர். சமைத்த சோற்றின் மீது அயிரை மீன் புளிக்குழம்பும் கருவாட்டுப் பொரியலும் சேர்த்து உண்டனர்.

   நெய்தல் நில மகளிர் அழகிய பூக்களுடன் கூடிய, பசுமையான தழை உடையினை உடுத்திக்கொண்டு கானற்பூக்களை உடுத்தினர். இம்மக்களின் வாழிடம் குடிசை ஆகும். குடிசைகளின் மேற்பகுதி புல், முள்ளிச்செடி, தாழை ஆகியவற்றால் அமைக்கப்பட்டிருக்கும். குடிசைகளின் முன்பகுதிகளில் ஓலைகளுடைய பனைமரங்கள் காணப்படும். இப்பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீட்டிற்கு வேலை அமைத்தனர். மணமிக்க நெய்தல் மலர்களைக்கொண்டு தங்கள் இல்லங்களை அழகுபடுத்தினர்.

   நெய்தல் நிலத்தினரின் முதன்மைத்தொழில் மீன் பிடித்தல் ஆகும். பிடித்த மீன்களை மணற்பரப்பில் காய வைத்து விற்றல். கடல் நீரைத் தேக்கி உப்பு தயாரித்தல். கடலிலிருந்து கிடைத்த முத்து, பவளம், சங்கு முதலிய பொருள்களைக் கொண்டு அழகிய வேலைப்பாட்டுன கூடிய அணிகலன்களைச் செய்தல் முதலான தொழில்களை மேற்கொண்டனர்.

## 7.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.85)

1. (இ) பைசல்
2. (அ) அரையர்
3. (ஆ) அறன்

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.85)**

1. ஒரு சொல்லில் வரவேண்டிய எழுத்துக்கு மாற்றாக வேறோர் எழுத்து மயங்கி வருவதனை 'போலி' என்கிறோம்.

2. எழுத்துப்போலி மூவகை வகைப்படும். அவை முதற்போலி, இடைப்போலி, இறுதிப்போலி என்பனவாகும். மேலும் முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி என்பனவும் வழக்கில் உள்ளன.

3. ஒரு மொழியில் உள்ள முதல், இடை, கடைஆகிய மூன்று எழுத்துக்களும் மாறுபட்டு வந்தும் பொருள் மாறாமல் இருந்தால் அது முற்றுப்போலி எனப்படும்
   சான்று : ஐந்து – அஞ்சு

4. சொல்லின் பகுதிகள் முன்பின்னாக மாறியும் பொருள் மாறாமல் இருந்தால் அது முன்பின்னதாகத் தொக்கபோலி என அழைக்கப்படுகிறது.
   சான்று: கால்வாய் – வாய்க்கால், தசை – சதை

5. முதற்போலி இடைப்போலி இறுதிப்போலிக்கான சான்றுகள்

| வ. எண் | முதற்போலி | இடைப்போலி | கடைப்போலி |
|---|---|---|---|
| 1. | பைசல் | அமைச்சு | முகன் |
| 2. | மைஞ்சு | இலைஞ்சி | பந்தர் |
| 3. | மையல் | அரையர் | நிலன் |

## 7.5 மொழியோடு விளையாடுவோம்

**பின்வரும் வினாக்களில் பொருந்தாச் சொற்களை எடுத்து எழுதுக. (பக்கம் எண்: 87)**

1. நிலம்
2. காற்று
3. நீர்
4. ஏரி
5. முத்து
6. வெண்டை

## 7.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 87)

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும்.
2. உப்பு விற்பவர்களை சங்க இலக்கியம் 'உமணர்கள்' என்று குறிப்பிட்டுள்ளது.
3. உப்பளம்
4. தூத்துக்குடி
5. மூன்றாம் இடம்

## 7.7 மொழிபெயர்ப்போம் (பக்க எண்: 88)

Pollution has been the root cause of the destruction of our planet. From seas to land, and even mountains, every place has been covered with debris and litter. Our earth is chocking. We must act urgently to prevent earth from becoming a dead planet.

நமது கிரகத்தின் அழிவுக்கு மாசுபாடுதான் மூல காரணமாக இருந்து வருகிறது. கடல் முதல் நிலம் வரை, மேலும் மலைகள் வரை கூட, ஒவ்வொரு இடமும் குப்பை மற்றும் கழிவுகளால் மூடப்பட்டுள்ளது. இதனால் நமது பூமி மூச்சுத்திணறி வருகிறது. பூமி ஓர் இறந்த கிரகமாக மாறுவதிலிருந்து தடுக்க நாம் அவசரமாகச் செயல்பட வேண்டும்.

## 7.9. உயர்நிலைத்திறன்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 89)

1. பச்சை கம்பளம்.
2. அழகு
3. நிலம்
4. பசும்புல்
5. பூமி, பார்த்தல்

# பாடம் – 8

# பூக்கும் மரங்களின் ரகசியம்

## 8.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.92)

1. இலைகள்
2. புல்வெளியில் ஒரு கல்
3. பிறப்பு
4. வேர்கள்
5. புதுக்கவிதை

#### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. – ப.எண்.92

1. வேர்கள் நீரைத் தேடிச் செல்கின்றன.

2. கவிஞர் தேவதேவன் அவர்களின் இயற்பெயர் பிச்சுமணி கைவல்யம்

3. "தேவதேவன் கவிதைகள்"

4. மரத்தின் இரகசியத்தைப் பற்றிப் பேசும் இந்தக் கவிதையானது மனித வாழ்க்கையின் இரகசியத்தையும் எடுத்துவைக்கிறது.

5. மரணம்

#### இ) பின்வரும் வினாவிற்கு விடை எழுதுக.

1. 1. நீரை விரும்பித் தேடுவதன் வெளிப்பாடுதான் வேர்கள். எவ்விதச்சூழல் வந்தாலும் அதை எதிர்க்கொள்வதற்காக மௌனமாகக் காத்திருப்பது தான் அடிமரம் என்றும், ஒளியை அடைய வேண்டும் என்ற உணர்வுதான் கிளைகள் என்றும், மரத்திலிருந்து இலைகள் உதிர்வதை மரணத்தோடும் பசுமையான தளரிகளைப் பிறப்போடும் ஒப்பிட்டு பூக்கும் மரங்களின் இரகசியம் என்ற கவிதையில் கவிஞர் பாடியுள்ளார். மரத்தின்

இரகசியத்தைப் பற்றிப் பேசும் இந்தக் கவிதையானது மனித வாழ்க்கையின் இரகசியத்தையும் எடுத்துவைக்கிறது.

## 8.3 படிப்போம்

## இயற்கைப் பாதுகாப்பு

### பயிற்சிகள்

#### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.95)

1. புவியின் இயக்கம்
2. புவி வெப்பமாதல்
3. சுற்றுச்சூழல்
4. நோய்க்கிருமிகள்
5. உலக இயற்கைப் பாதுகாப்பு

#### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.95)

1. பவளப்பாறைகள், வெப்ப மண்டல மழைக்காடுகள், ஆல்பைன் புல்வெளிகள் போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகளில் புவி வெப்பமடைதல் காரணமாக ஏற்படும் மாற்றங்களால் பல உயிரினங்கள் தங்கள் வாழ்விடத்தை இழக்க நேர்கிறது. இதுவே வாழ்விட இழப்பு எனப்படும்.

2. பனிப்பாறை என்பது சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாகும். இது இயற்கைச் சமநிலையிலிருந்து தவறும்போது ஆறுகளின் ஓட்ட விகிதம், கடல் மட்டம், மழைச் சுழற்சி போன்றவையும் சமநிலை தவறுகின்றன.

3. இயற்கையைப் பாதுகாக்க நாம் செய்யவேண்டியவை மரம் வளர்த்தல். வனங்களைப் பாதுகாத்தல். ஓசோனைச் சிதைக்கும் வாயுக்களின் பயன்பாடுகளைத் தவிர்த்தல்.
பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைத்தல். மிதிவண்டிகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல். நீர்நிலைகளில் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதைத் தவிர்த்தல், நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்தல். சூரிய ஒளி, காற்று முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புதுபிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த ஊக்குவித்தல். இவற்றை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுதல்.

4. இயற்கையின் கொடையான நிலம், நீர், காற்று ஆகியவை இந்த உலகம் இயங்குவதற்கான அடிப்படை ஆதாரங்களாகும்.

5. "தன்னுடைய கல்லை ஒருவர் எடுத்துவைக்கும்போது இந்த உலகத்தைக் கட்டமைப்பதில் தன்னுடைய பங்கையும் அளிக்கிறோம் என்ற உணர்வுதான் மானிடம்" என்கிறார் பிரெஞ்சு நாவலாசிரியர் அந்த்வான் து செந்த்–எக்சுபெரி

### இ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. – ப.எண்.95

1. இயற்கையின் கொடையான நிலம். நீர், காற்று ஆகியவை இந்த உலகம் இயங்குவதற்கான அடிப்படை ஆதாரங்கள் ஆகும். இந்த இயற்கை ஆதாரங்கள் இல்லையென்றால் புவியின் இயக்கமே இல்லை எனலாம். இயற்கையின் ஒவ்வோர் அங்கமும் தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும், புதிய சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. ஆனால், இயற்கையுடன் மனிதர்கள் நடத்தும் அதீத இடையீடு காரணமாக இயற்கையானது சமநிலை தவறுகிறது. விளைவாக, புவி வெப்பமாதல் அதிகரித்து வருகிறது.
   இந்தப் புவி வெப்பமாதல் அதிகரித்து வருவதால் பனிப்பாறைகள் அதிகம் உருகின்றன. இதனால் கடல் மட்டம் உயருகிறது.
   மேலும் வானிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு, அதிக வெப்பம், மழை, வறட்சி, சூறாவளி போன்றவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
   வாழ்விட இழப்பு, கிருமிகளால் அதிகரிக்கும் உடல் நலிவு போன்றவைகளும் உண்டாகின்றன.

2. இயற்கையைப் பாதுகாக்க நாம் செய்யவேண்டியவை :
   - மரம் வளர்த்தல்.
   - வனங்களைப் பாதுகாத்தல்.
   - ஓசோனைச் சிதைக்கும் வாயுக்களின் பயன்பாடுகளைத் தவிர்த்தல்.
   - பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைத்தல்.
   - மிதிவண்டிகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
   - நீர்நிலைகளில் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதைத் தவிர்த்தல்,
   - நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்தல்.
   - சூரிய ஒளி, காற்று முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

## 8.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்க எண்: 97)**

1. (இ) 2
2. (ஆ) கொடு
3. (அ) 4

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண்: 97)**

1. ஒரு பகுபதச்சொல் பிரிந்து நிற்கும் நிலையில் அமையும் உறுப்புகள் பகுபத உறுப்புகள் ஆகும்.அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என ஆறு வகைப்படும்.

2. பகாப்பதம் நான்கு வகைப்படும். அவை பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் ஆகும்.

3. பகுபத வகைகளைப் பெயர்பகுப்பதம், வினைப்பகுபதம் என இரண்டாகப் பகுக்கலாம். வினைப்பகுபதம், தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்பு வினைப்பகுபதம் என்று இருவகைப்படும்.

4. பதங்களுக்குச் சான்றுகள்

| வ.எண் | பகுபதம் | | பகாப்பதம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | பெயர்ப் பகுபதம் | வினைப் பகுபதம் | பெயர்ப் பகாபதம் | வினைப் பகாபதம் | இடைப் பகாபதம் | உரிப் பகாபதம் |
| 1. | அறிஞன் | செய்தான் | நெருப்பு | உண் | மன் | சால |
| 2 | கவிஞன் | வந்தான் | காற்று | வா | கொல் | நனி |

சிந்தனை வினா : "கடல்" என்ற சொல் ஒரு பகாப்பதம். "கடல்" என்ற சொல் பிரிக்க முடியாத சொல் என்பதால் அது பகாதபதம் ஆகும்.

## 8.5 கருத்து விளக்கப் படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 98)

1. பனை தேசியத் திருவிழா திருநெல்வேலி அம்பை நெடுஞ்சாலையில் உள்ள தருவை பனங்காட்டில் 12, 13 ஆகஸ்டு 2023 அன்று நடைபெறுகிறது.
2. தமிழிசை, பத்ரகாளி வில்லுப்பாட்டு
3. சான்றோர்கள்
4. பனைச் சந்தை
5. 1000 நுங்கு வண்டிகள், 1000 பனையோலைக் காத்தாடிகள்

## 8.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 99)

1. பனைமரம்
2. 30
3. பனைமரத்திலிருந்து நுங்கு, பதநீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை கிடைக்கும்.
4. பனைமரம் தமிழர்களின் வாழ்க்கையோடு ஒன்றிக் காணப்படுகிறது.
5. பனைநாடு குமரிக்கண்டத்தில் இருந்தது.

## 8.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 25 )

உலக இயற்கை பாதுகாப்பு நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இயற்கையைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நிலைத்தன்மையை ஊக்குவிக்கவும் இந்த நாள் நமக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. நம் வாழ்வில் இயற்கையின் முக்கியத்துவத்தை இந்த நாளில் மட்டுமல்லாமல் நாள்தோறும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

World Nature Conservation Day is celebrated every year on July 28th around the world. This day provides us with an opportunity to raise awareness about nature conservation and promote sustainability. We must remember the importance of nature in our lives, not just on this day, but every day.

## 8.9 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் தலைப்பு சார்ந்து கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு, ஓர் உரையாடல் உருவாக்குக. (பக்க எண்:101)**

### சுற்றுச்சூழல் பாதுகாப்பு

| | | |
|---|---|---|
| தேன்மொழி | : | அம்மா இங்கு பாருங்களேன்! இந்தத் தூய்மையான ஆற்றை எவ்வாறு மாசுப்படுத்துகிறார்கள் என்று. |
| அம்மா | : | ஆமாம் தேன்மொழி. அங்கே பார் நெகிழி குப்பைகளை ஆற்றில் வீசி எறிகிறார்கள். |
| தேன்மொழி | : | நெகிழிகளை மீன்கள் உண்டால் அவற்றின் நிலை என்ன ஆகும்? நினைக்கவே கவலையாக இருக்கிறது. |
| அம்மா | : | அதுமட்டுமா துணிகளையும் சோப்பு போட்டு துவைக்கிறார்கள். இதனால் நீர் எவ்வளவு கெட்டுபோகும். மாடுகளையும் குளிப்பாட்டுகிறார்கள். |
| தேன்மொழி | : | அங்கே பாருங்கள் சிலர் குளிக்கிறார்கள். ஆனால் அவர்களும் சோப்பைத் தான் பயன்படுத்துகிறார்கள். |
| அம்மா | : | இங்கே பார் ஒருவர் நீர் எடுத்துச் செல்கிறார். |
| தேன் மொழி | : | இந்த நீரைத் தான் இவர்கள் குடிக்கவும் சமைக்கவும் பயன்படுத்துகிறார்கள். |
| அம்மா | : | ஆமாம். சுற்றுப்புறத்தை நாம் நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் பல நோய்கள் உருவாகும். |
| தேன்மொழி | : | இவர்களிடம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறலாமா. |
| அம்மா | : | ஓ! கூறலாமே. நீ போய் அவர்களுக்கு எடுத்துக்கூறு. |

தேன்மொழி ஆற்றுக்குள் இருப்பவர்களின் சுற்றுப்புறத் தூய்மைப் பற்றி எடுத்துக் கூறுகிறாள்.

# மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (பக்க எண்: 102)**

1. உலகப்பொதுமறை
2. காந்தியக் கவிஞர்
3. தூது
4. தனிப்பாடல் திரட்டு
5. பாரதிதாசன்

**2) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (பக்க எண்: 102)**

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

**3) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண்: 102)**

1. தமிழ்விடு தூது 96 வகைச் சிற்றிலக்கிங்களுள் ஒன்று. தூது இலக்கியங்களுள் புகழ்பெற்றது தமிழ்விடு தூது. இந்நூல் மதுரை சோமசுந்தர கடவுளிடம் காதல் கொண்ட தலைவி தமிழைத் தூது அனுப்புவதாக அமைந்தது. இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இந்நூல் கலிவெண்பாவால் பாடப்பட்டு 268 கண்ணிகளை உடையது.

2. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
   சேரா தியல்வது நாடு.

   கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
   நாடென்ப நாட்டின் தலை.

   இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
   வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

3. நாமக்கல் கவிஞர் என்று அழைக்கப்படும் வெ. இராமலிங்கனார் நாமக்கல் மாவட்டத்தில் பிறந்ததால் இவ்வாறு அழைக்கப்பட்டார். என்கதை (சுயசரிதம்), அவனும் அவளும், மலைக்கள்ளன், தமிழன் இதயம், சங்கொலி, காந்தி அஞ்சலி போன்ற நூல்களை இயற்றியுள்ளார். தமிழக அரசின் முதல் அரசவை கவிஞர் என்ற பெருமைக்குரியவர். இந்திய அரசு இவருக்குப் பத்ம பூஷண் (தாமரை செவ்வணி விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

4. கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
குறை குடம் கூத்தாடும்
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
கடைசி துளியில் பானை நிரம்பும்

5. நாடுவிட்டு நாடு செல்லும் நதிகளை எவரேனும் நாடு கடத்தியதுண்டா? வேற்று நாட்டுப்பக்கம் வேலி தாண்டி செல்கிறது என்று காற்றினைக் கைது செய்ததுண்டா? மேலூரில் மழையைப் பொழிந்துவிட்டு கீழூரில் பெய்ய வரும் நீர் கொண்ட மேகத்தை எல்லைச்சுவர்கள் தடுத்ததுண்டா? எல்லையில் நிற்கும் மரங்கள் அண்டை நாட்டின் நீரைக் குடிப்பதால் அவற்றின் வேர்களை வெட்ட முடியுமா? என் எல்லை இதுவென்று ஏன் எண்ணுகிறாய் தோழா? அனைவரும் பொது என்ற இலக்கோடு எழுச்சிகொள்! எழுந்து நில்! என்று தாராபாரதி தன் கவிதை மூலம் தெரிவிக்கிறார்.

**4) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்க எண் 103)**

1. மலேசியா
2. கால்பந்து
3. பழமொழி
4. தூத்துக்குடி
5. மீன் பிடித்தல்

5) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண் 103)

1. ஒரு சொல்லைப் பகுதி விகுதி முதலிய உறுப்புகளாகப் பிரிக்க முடிந்தால் அது பகுபதம் ஆகும். பகுபதம் இரண்டு வகைப்படும். அவை பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் ஆகும்.

2. எழுத்துப்போலி என்பது ஒரு சொல்லில் வர வேண்டிய எழுத்துக்கு மாற்றாக வேறோர் எழுத்து மயங்கி வருவதை எழுத்துப்போலி என்கிறோம்.

3. வல்லினம் மிகா இடங்கள் அது, இது, அவை, இவை என்னும் சுட்டுப்பெயர்களுக்குப் பின் மிகாது. சான்று: அது பெரிது, அவை காகங்கள்.

   இரண்டாம் வேற்றுமைத் தொகை, நான்காம் வேற்றுமைத் தொகையில் வல்லின மிகாது. சான்று: தண்ணீர் தந்தான், சென்னை சென்றான்.

4. இலக்கியங்களில் பயன்படுத்தப்படும் சொற்கள் இலக்கிய வகை சொற்கள். அவை நான்கு வகைப்படும். சான்று :

   இயற்சொல் – கடல் , நடந்தான்
   திரிச்சொல் – பீலி, வினவினான்
   திசைச்சொல் – வாடகை, அசல்
   வடசொல் – கமலம், புஷ்பம்

5. இலக்கண அடிப்படையில் பிர்க்கப்படும் சொற்கள் இலக்கண வகை சொற்கள். அவை நான்கு வகைப்படும். சான்று :

   பெயர்ச்சொல் – புத்தகம், சென்னை
   வினைச்சொல் – கேட்டாள், பார்த்தாள்
   இடைச்சொல் – அவரே, தண்ணீரின்
   உரிச்சொல் – உறு, தவ, நனி

6) கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (பக்க எண் 103)

1. மொழி முதல் எழுத்துகள்

சொல்லுக்கு (மொழிக்கு) முதலில் வரும். அதாவது ஒரு சொல்லில் முதல் எழுத்தாக இடம்பெறும் எழுத்துகள் மொழிமுதல் எழுத்துகள்.

சான்று : அண்ணன், காடு, கடல், மீன், இவற்றில் முறையே அ, கா, க, மீ ஆகியவை மொழிமுதல் எழுத்துகளாகும்.

க் (கா – க் + ஆ) : (க – க் + அ) : ம் (மீ – ம் + ஈ)

மொழிமுதல் உயிரெழுத்துகள்:

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும். எ.கா:

| | |
|---|---|
| அ | அம்மா |
| ஆ | ஆடு |
| இ | இலை |
| ஈ | ஈட்டி |
| உ | உடை |
| ஊ | ஊர் |
| எ | எலி |
| ஏ | ஏணி |
| ஐ | ஐந்து |
| ஒ | ஒன்று |
| ஓ | ஓடு |
| ஔ | ஔவை |

மொழிமுதல் மெய்யெழுத்துகள்:

மெய்யெழுத்துகளுள் க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் ஆகிய பத்து மட்டுமே மொழிக்கு முதலில் வரும். மெய்யெழுத்துகள் தனித்து மொழிக்கு முதலில் வருவதில்லை. உயிரெழுத்துகளுடன் சேர்ந்தே வரும்.

க், த், ந், ப், ம் ஆகிய ஐந்தும் உயிரெழுத்து பன்னிரண்டுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

ங், ச், ஞ், ய், வ் ஆகிய ஐந்தும் சில உயிரெழுத்துகளோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

ஙகர மெய்யெழுத்து:
'ங்' என்னும் மெய்யெழுத்து 'அ' என்னும் உயிரெழுத்தோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எ.கா: ஙனம் (விதம்)

சகர மெய்யெழுத்து:

'ச்' என்னும் மெய்யெழுத்து அ, ஐ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வராது. ஆனால் தற்போது சங்கு, சக்கரம் போன்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

ஞகர மெய்யெழுத்து:

'ஞ்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு எழுத்துகளுடன் மட்டுமே வரும்.
எ.கா:

ஞ ஞமலி
ஞா ஞாயிறு
ஞெ ஞெகிழி
ஞொ ஞொள்ளுதல்

யகர மெய்யெழுத்து:

'ய்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர் எழுத்துகளுடன் மட்டுமே வரும். எ.கா:

ய யவனர்
யா யானை
யு யுகம்
யூ யூகி
யோ யோகம்
யௌ யௌவனம்

வகர மெய்யெழுத்து:

'வ்' என்னும் மெய்யெழுத்து அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ ஔ ஆகிய எட்டு உயிர் எழுத்துகளுடன் மட்டுமே வரும். எ.கா:

வ வணக்கம்
வா வாழ்த்து
வி விழி

வீ வீடு
வெ வெள்ளை
வே வேம்பு
வை வைகை
வௌ வௌவால்

2. மொழியிறுதி எழுத்துகள்

சொல்லுக்கு (மொழிக்கு) இறுதியில் வரும். அதாவது ஒரு சொல்லில் இறுதி எழுத்தாக இடம்பெறும் எழுத்துகள் மொழியிறுதி எழுத்துகள். மொழியிறுதி எழுத்துகள், அவற்றின் தன்மையைப் பொறுத்து மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை,

1. மொழிக்கு இறுதியில் வரும் உயிரெழுத்துகள் (உயிரீறு)
2. மொழிக்கு இறுதியில் வரும் குற்றியலுகரம் (குற்றியலுகர ஈறு)
3. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துகள் (மெய்யீறு)

உயிரீறு

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும்.
(எகரக் குறில் அளபெடையாக மட்டும் மொழிக்கு இறுதியில் வரும்)

| | | | |
|---|---|---|---|
| அ | பல | எ | சேஎ |
| ஆ | பலா | ஏ | தே (தெய்வம், தலைவன்) |
| இ | பனி | ஐ | அன்னை |
| ஈ | தேனீ | ஒ | நொ (துன்பம், நோய்) |
| உ | ஆறு | ஓ | போ |
| ஊ | பூ | ஔ | வௌ (கைப்பற்று, திருடு) |

குற்றியலுகர ஈறு

| | |
|---|---|
| பழகு | அழகு |
| மாசு | காசு |
| பட்டு | ஆடு |
| பந்து | சந்து |
| பாம்பு | வேம்பு |
| புற்று | காற்று |

மெய்யீறு

மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும். இவற்றுள் வல்லின மெய்கள் ஆறும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. மெல்லின மெய்யெழுத்துகளில் (ஞ், ண், ந், ம், ன்) ஆகிய ஐந்தும், இடையின எழுத்துகள் (ய், ர், ல், வ், ழ், ள்) ஆறும் ஆகிய பதினொன்றும் மொழிக்கு இறுதியில் வரும்.

**மெல்லின மெய்கள்**

| | |
|---|---|
| ஞ் | உரிஞ் (உராய்தல் |
| ண் | மண் |
| ந் | வெரிந் (முதுகு) |
| ம் | அன்னம் |
| ன் | கண்ணன் |

இடையின மெய்கள்

| | |
|---|---|
| ய் | தாய் |
| ர் | வேர் |
| ல் | வேல் |
| வ் | தெவ் (பகை) |
| ழ் | புகழ் |
| ள் | வாள் |

| | |
|---|---|
| மொழியிறுதி உயிரெழுத்துகள் | 12 |
| மொழியிறுதி மெய்யெழுத்துகள் | 11 |
| மொழியிறுதி குற்றியலுகரம் | 01 |
| ஆக, மொழியிறுதி எழுத்துகள் மொத்தம் | 24 |

### 3. கம்பராமாயணம் காட்டும் நாட்டு வளம்

நிலவளமும் நீர்வளமும் மலைவளமும் கவின்மிகு காடுகளும் அமையப் பெற்றிருப்பதே ஒரு நாட்டிற்குப் பெருமையாகும். காடுகளும் மலைகளும் இயற்கை வடித்த இன்பக் கலைகள் என்பதைக் கம்பராமாயணம் குறிப்பிடுகிறது.

**நாட்டுவளம்**

கோசல நாட்டு மக்களிடம் எந்தக் குற்றமும் இல்லாததால் அவர்களுக்கு இயற்கையால் ஏற்படும் மரணம் தவிர இளம் வயது மரணம் இல்லை. ஏனென்றால் அங்கு வாழ்வோர், மனத்தில் எந்தக் குற்ற எண்ணமும் இல்லாத தூய்மையான உள்ளம் உடையவர்கள்; அவர்கள் மனத்தில் சிறிதளவும் சினம் இல்லை; சினம் இல்லாத காரணத்தால் பெரிய குற்றங்கள் இல்லை; அதோடு நல்ல அறங்களையே செய்வதால் அவர்களிடம் தவறுகள் இல்லை என்று கோசல நாடு குறித்துப் கம்பர் பாடுகிறார்.

**நிலவளம்**

கோசல நாட்டு வயலின் வரப்புகளில் முத்துகளும், தண்ணீர் பாயும் மடைகளில் சங்குகளும், மிகுந்த நீர்ப்பெருக்குடைய நிலங்களில் செம்பொன்னும் நிறைந்திருக்கின்றன, எருமைகள் படிகின்ற இடங்களில் செங்கழுநீர் மலர்களும், பரம்படித்த இடங்களில் பவளங்களும், நெற்பயிர் நிறைந்த வயல்களில் அன்னங்களும் இருந்தன. பயிரிடப்படாத நிலமெங்கும் செந்தேனும், அழகிய சோலைகளெங்கும் தேன் உண்டு மகிழும் வண்டுகளும் உள்ளன என்று கம்பர் புகழ்ந்துரைக்கிறார்.

4. ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பெற்ற அகழாய்வுப் பொருள்கள் சங்ககால மக்கள் வாழ்ந்ததையும் கடல்சார் வணிகம் நடந்ததையும் உறுதிப்படுத்துகின்றன.

**முதுமக்கள் தாழி ஓவியங்கள்**

இங்கே கிடைத்த ஒரு பானையின் உட்புறத்தில் நடனமாடும் பெண்ணின் உருவம் வரையப்பட்டுள்ளது. அதன் பக்கத்தில் கரும்பு போன்ற தாவரம், கொக்கு, முதலை போன்றவை வரையப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த கலை வடிவங்கள் வெகு அரிதாகவே கிடைத்துள்ள நிலையில், மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்பாகவே மிக நுண்ணிய தூரிகையால் அவற்றில் வரையப்பட்டுள்ள சில வடிவங்கள் நமக்குப் பல அரிய தரவுகளை அளிக்கின்றன.

**கருவிகள்**

ஆதிச்சநல்லூரில் பெரும் எண்ணிக்கையில் இரும்புப்பொருள்களும் குறைந்த எண்ணிக்கையில் தாமிரப்பொருள்களும் கிடைத்திருக்கின்றன. இரும்புப் பொருள்களைப் பொறுத்தவரை உழுவதற்கான கருவிகள், ஆயுதங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

**நாணயங்கள்**

ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வுப் பணியில் முதல்முறையாக சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் இரண்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில், கடல் ஆமைகளின் உருவமும், மரம், யானை, மீன் ஆகியவற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூர் புதைமேட்டில் கிடைக்கும் சான்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கைமுறை, கலை, பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய உதவும் கருவூலமாக உள்ளன. இங்கே கிடைத்த சான்றுகள் சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

5. இயற்கை பாதுகாப்பு என்பது உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கையாகும்.

"தன்னுடைய கல்லை ஒருவர் எடுத்துவைக்கும்போது இந்த உலகத்தைக் கட்டமைப்பதில் தன்னுடைய பங்கையும் அளிக்கிறோம் என்ற உணர்வுதான் மானிடம்" என்கிறார் பிரெஞ்சு நாவலாசிரியர் அந்த்வான் து செந்த்–எக்சுபெரி (Antoine de Saint–Exupery). இன்று இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கான முயற்சியிலும் நம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதது. அதற்காக நாம் செய்ய வேண்டியவற்றுள் சில பின்வருமாறு:

- மரம் வளர்த்தல்.
- வனங்களைப் பாதுகாத்தல்.
- ஓசோனைச் சிதைக்கும் வாயுக்களின் பயன்பாடுகளைத் தவிர்த்தல்.
- பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களின் பயன்பாட்டைக் குறைத்தல்.
- மிதிவண்டிகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
- நீர்நிலைகளில் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதைத் தவிர்த்தல்.
- நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்தல்.

- சூரிய ஒளி, காற்று முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

இந்தச் செயல்பாடுகளின் இன்றியமையாமையை நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பகிர்ந்துகொள்ளுதல்.

ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28ஆம் நாள் உலக இயற்கைப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆகவே இயற்கையை நேசிப்பது மட்டுமின்றி அதைப் பாதுகாப்பதும் நம் கடமையாகும். இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். வருங்காலத் தலைமுறையினருக்கு இப்பூமியை மாசின்றிக் கொடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

### 7) பின்வருவனவற்றைப் பொருத்துக. (பக்க எண் 104)

1. கல் – பெயர் இயற்சொல்
2. ஆழி – திரிச்சொல்
3. அல்வா – திசைச் சொல்
4. புஷ்பம் – வடசொல்
5. தாவியது – வினை இயற்சொல்

### 8) பின்வரும் ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக. (பக்க எண் 104)

1. Update – புதுபித்தல்
2. Emigration – குடியேற்றம்
3. Revival – மறுமலர்ச்சி
4. Palace – அரண்மனை
5. Land Resources – நில வளங்கள்
6. Corals – பவளப்பாறைகள்
7. Situation – சூழ்நிலை
8. Skeleton – எலும்புக்கூடு
9. Maritime trade – கடல் வணிகம்
10. Minerals – கனிமங்கள்

### 9) கீழ்க்காணும் பழமொழிகளைச் சரியான சொல் கொண்டு நிரப்புக. (பக்க எண் 104)

1. காய்ந்த மரம் **கல்** அடிபடும்.

2. கூழுக்கும் ஆசை **<u>மீசைக்கும்</u>** ஆசை.
3. கெடுவான் **<u>கேடு</u>** நினைப்பான்.
4. 4.தவளை தன் **<u>வாயால்</u>** கெடும்.
5. தாயையும் **<u>தண்ணீரையும்</u>** பழிக்காதே.

**10) கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ள இணை எது? (பக்க எண் 104)**

5. இரவு – காலப்பெயர்

**11) பின்வரும் திருக்குறளில் விடுபட்டுள்ள சொல்லைக் கொண்டு எழுதுக, (பக்க எண் 105)**

1. பிணியும்
2. நாட்டின்
3. வல்லரணும்
4. நாடா
5. நாடு

**12. பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக. (பக்க எண் 105)**

1. பனை
2. தூத்துக்குடி
3. நீலகிரி மாவட்டம்
4. ஒட்டக்கூத்தர்
5. மண்புழு

**13) பின்வரும் உரைப் பகுதிகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக. (பக்க எண் 105)**

1. G.U. Pope was a Tamil scholar who spent 40 years in Tamil Nadu and translated many Tamil texts into English. His popular translations included those of the Tirukkural and Thiruvasagam.

   ஜி.யு. போப் ஒரு தமிழ் அறிஞர் ஆவார், அவர் தமிழ்நாட்டில் 40 ஆண்டுகள் கழித்தார் மற்றும் பல தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவரது பிரபலமான மொழிபெயர்ப்புகளில் திருக்குறள் மற்றும் திருவாசகம் ஆகியவை அடங்கும்.

2. The World Tamil Conference is a series of conferences to discuss the social growth of the Tamil language. Each conference is attended by thousands of Tamil enthusiasts around the

world. Conferences are hosted in various cities in India, as well as world cities with a significant Tamil population.

உலகத் தமிழ் மாநாடு என்பது தமிழ் மொழியின் சமூக வளர்ச்சியைப் பற்றி விவாதிக்கும் தொடர் மாநாடுகளாகும். ஒவ்வொரு மாநாட்டிலும் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொள்கிறார்கள். மாநாடுகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும், கணிசமான தமிழ் மக்கள்தொகை கொண்ட உலக நகரங்களிலும் நடத்தப்படுகின்றன.

3. Brazil is the largest country in South America. Brazil is the world's fifth–largest country by area and the seventh most populous.

   தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நாடு பிரேசில். பரப்பளவில் உலகின் ஐந்தாவது பெரிய நாடாகவும், ஏழாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகவும் பிரேசில் உள்ளது.

4. The Avvaiyar who lived during the Sangam period is said to have had cordial relations with the Tamil chieftains Vēl Pāri and Athiyaman. She wrote 59 poems in the Purananūru. The name Avvaiyar means a respectable good woman, hence a generic title: her personal name is not known.

   சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார், தமிழ் மன்னர்களான வேல்பாரி மற்றும் அதியமான் ஆகியோருடன் நல்லுறவைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அவர் புறநானூற்றில் 59 பாடல்களை எழுதியுள்ளார். ஔவையார் என்ற பெயருக்கு மரியாதைக்குரிய நல்ல பெண் என்று பொருள். எனவே இது ஒரு பொதுவான மரியாதைப் பெயராக விளங்குகிறது, இவரது தனிப்பட்ட பெயர் அரியப்படவில்லை.

5. Adichanallur is an archaeological site in Thoothukudi district in TamilNadu, India that has been the site of a number of very important archaeological finds. Korkai, the capital of the Early Pandyan Kingdom, is located about 15 km from Adichanallur.

   இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர் ஒரு தொல்பொருள் அகழாய்வு தளமாகும், இது பல முக்கியமான தொல் பொருள் கண்டுபிடிப்புகளின் இருப்பிடமாக உள்ளது. ஆரம்பகால பாண்டியர்களின் ஆட்சி தலைநகரான கொற்கை, ஆதிச்சநல்லூரிலிருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

**14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண் 105)**

1. மாபெரும் தமிழ் கனவு
2. தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை
3. சொற்பொழிவாளர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள்
4. உயர்கல்வி வழிகாட்டி, தமிழ்ப் பெருமிதம்
5. 24.04.2023 திங்கட்கிழமை மாலை5.30 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கம், சென்னை,

**15) பின்வரும் வினாவிற்கு உங்கள் சொந்த கற்பனையில் விடை எழுதுக.**

அ) மழைக் கவிதை

நீரின்றி அமையாது உலகு – ஆதலால்

மாமழையைப் போற்றுவோம்

வானின்றி அமையாது ஒழுங்கு – எனவே

மழைப் பெற வனம் வளர்போம்

சுட்டுச்சுட்டாய் பெய்யும் நீரானாலும்

அதனை சேமிக்க நீர் நிலைகளைப் பெருக்குவோம்

வாருங்கள் மழை நல்லது – அதில்

நனைந்து இன்பம் பெறுவோம்.

## ஆ) நண்பருக்குக் கடிதம்

முகிலன்
எண்: 175, 5 வது நிழற்சாலை
மதுரை
21 மே 2018

அன்புள்ள நண்பன் முகிலனே,

வணக்கம்.

நண்பா, நீ நலமாக இருக்கிறாயா? நானும் என் குடும்பத்தாரும் நலமாக இருக்கின்றோம். அதே போல நீயும் உன் குடும்ப உறுப்பினர்களும் நலத்துடன் வாழ என் பிரார்த்தனைகள்.

நீ என்னுடன் பழகிய நாட்கள் இன்னும் என் நினைவில் இருக்கின்றன. நம்முடைய பள்ளி நாட்களை நான் இன்னும் மறக்கவில்லை. ஒரு முறை நாம் ஒன்றாக கடற்கரைக்கு சென்றோம், அந்த நாளை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். நீ எப்படி இருக்கிறாய்? நீ எங்கு வேலை செய்கிறாய்?

நான் விரைவில் உன்னை சந்திக்க விரும்புகிறேன். அதுவரை நீ உன் உடல்நலத்தை பார்த்துக் கொள்.

அன்புடன் உன் தோழன்,

கவின்.

# பாடம் – 9

# சீவக சிந்தாமணி

## 9.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.110)**

1. சரி
2. தவறு
3. சரி
4. சரி
5. தவறு

**ஆ) பொருத்துக. (ப.எண்.110)**

| | | | |
|---|---|---|---|
| 1. | நற்பண்பாளர் | – | முற்றிய நெற்கதிர் |
| 2. | தீயபண்பாளர் | – | முற்றாத நெற்பயிர் |
| 3. | சீவகசிந்தாமணி | – | திருத்தக்கத்தேவர் |
| 4. | சூல் | – | கரு |
| 5. | சிலப்பதிகாரம் | – | இளங்கோவடிகள் |

**இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.110)**

1. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் உள்ளது.

2. சீவக சிந்தாமணி தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. சீவகனைத் தலைவனாகக் கொண்டு படைக்கப்பட்டது. இது மணநூல் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நூல் தமிழில் விருத்தப்பாவில் அமைந்த முதற்காப்பியம் ஆகும். 13 இலம்பகங்களைக் கொண்டது. சீவக சிந்தாமணியை எழுதியவர் திருக்கதக்கத்தேவர் ஆவார்.

3. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

4. இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே சீவக சிந்தாமணியின் மையக்கருத்தாகும்.

5. திருத்தக்கத்தேவர்

ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.110)

1. கருக்கொண்ட பச்சைப்பாம்பு போல நெற்பயிர்கள் தோற்றம் கொண்டுள்ளன. அவ்வாறு நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது செல்வம் பெற்ற பக்குவ அறிவு இல்லாதவர் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் உள்ளது. அப்பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது, தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப் போல் உள்ளது.

2. சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

## 9.3 படிப்போம்

# தமிழ் இலக்கியத்தில் கல்வியின் சிறப்பு

### பயிற்சிகள்

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.112)

1. (ஆ) கல்வி
2. (அ) பழமொழி நானூறு
3. (ஆ) பாரதியார்

ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.112)

1. புறத்தோற்றத்தில் வெளிப்படும் அழகெல்லாம் அழகல்ல. கல்வி கற்றதனால் நான் நற்பண்பு உடையவன் எனக் கருதும் மனநிலையே ஒருவருக்கு அழகு என்று நாலடியார் குறிப்பிடுகிறது.

2. பாரதியார் கல்வி கற்ற பெண்கள் பல நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள புதுமைகளைக் கொண்டுவந்து தம் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிறார்.

இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. **திருக்குறள்:** மனித உயிர்க்குக் கண்ணாகக் கருதப்படுவது கல்வியே என்பதைத் திருவள்ளுவர்,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்னும் குறள்வழி வெளிப்படுத்துகிறார்.

**புறநானூறு** : கண்களாகப் போற்ற வேண்டிய கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர். ஆகவே தன் ஆசிரியருக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில் அதைத் தீர்க்க உதவி செய்ய வேண்டும். பணிவோடு நடந்துகொள்ளுதல் வேண்டும். நற்செயல்கள் அனைத்தையும் கடைப்பிடித்து, வெறுப்பின்றிக் கல்வியைப் பெறவேண்டும் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

**பழமொழி நானூறு** : கற்க வேண்டிய நூல்களை முழுமையாகக் கற்றுத் தேர்ந்தவர்களே அறிவுடையார் எனப்படுகின்றனர். அவ்வாறு கற்றோர் உலகின் எப்பகுதிக்கும் எளிமையாகச் செல்ல முடியும். கற்றோர்க்கு எல்லா நாடும் தம்நாடு போன்றதேயாகும். கல்வி கற்றோர் வழியில் உண்பதற்கு உணவுகூடக் கொண்டுசெல்ல வேண்டியதில்லை எனப் பழமொழி நானூறு கல்வி கற்றோரின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளது.

**மூதுரை** : ஒரு நாட்டின் அரசரையும் குற்றம் நீங்கக் கற்றோரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கற்றோரே அரசரைக் காட்டிலும் சிறப்புடையவர். அரசருக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு இருக்கும். கற்றோருக்குத் தன் நாடு மட்டுமன்றி அவர்கள் செல்லும் எல்லா நாடுகளிலும் சிறப்புஉண்டாகும் என்று மூதுரை குறிப்பிடுகிறது.

**நாலடியார்** : சமுதாயத்தை மேம்படுத்தும் ஆற்றல் உடையது கல்வி. புறத்தோற்றத்தில் வெளிப்படும் அழகெல்லாம் அழகல்ல. 'கல்வி கற்றதனால் நான் நற்பண்பு உடையவன்' எனக் கருதும் மனநிலையே ஒருவருக்கு அழகு என்று நாலடியார் குறிப்பிடுகிறது.

**பாரதியார் கவிதைகள்** : தமிழகத்தில் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதை உணர்ந்து பெண்கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். பாரதியார், கல்வி கற்ற பெண்கள் பல நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள புதுமைகளைக் கொண்டுவந்து தம் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிறார்.

## 9.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண். 116)

1. (அ) த், ட், ற்
2. (அ) அர், ஆர், மார்
3. (ஆ) விகுதி
4. (ஈ) பகுதி – விகுதி
5. (அ) பகுதி

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக – ப.எண்.116

1. பகுபத உறுப்புகள் மொத்தம் ஆறு. அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்

2. காலங்காட்டும் இடைநிலைகள் இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்றாகும். அவை

| | | |
|---|---|---|
| இறந்தகால இடைநிலை | – | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலை | – | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலை | – | ப், வ் |

3. சந்தி:

   இது பெரும்பாலும் முதனிலை (பகுதி)க்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் சில நேரங்களில் வரக்கூடும். உறுப்புகளின் இணைவில் (சந்தி), அவற்றை இணைக்க வருவது சந்தி.

   சான்று : நடத்தல் = நட – பகுதி; த் – சந்தி; தல் – விகுதி

   பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் 'த்' சந்தி வந்திருப்பதைக் காண முடிகிறது.

   சாரியை

   இது பெரும்பாலும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் உறுப்பு ஆகும்.

சான்று : நடந்தனன் = நட + த் (ந்) + த் + அன் + அன்

இங்கு இடைநிலைக்கும் (த்) விகுதிக்கும் (அன்) இடையில் அமைந்திருக்கும் 'அன்' சாரியை ஆகும்.

4. விகுதி பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு ஆகும். இதனை இறுதிநிலை என்றும் வழங்குவர்.

   படித்தாள் என்னும் பகுபதத்தில் (படி + த் + த் + ஆள்) ஆள் என்பது விகுதி ஆகும். இது திணை (உயர்திணை), பால் (பெண்பால்), எண், (ஒருமை) இடம் (படர்க்கை) ஆகியவற்றைக் காட்டிநிற்கும்.

5. பகுபத உறுப்பிலக்கணம்

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| வாழ்க | வாழ் | | | | | க |
| பெயர்த்த | பெயர் | த் | | த் | | அ |
| மகிழ்ந்தாள் | மகிழ் | த் | (ந்) | த் | | ஆள் |
| வந்தனள் | வா | த் | (ந்) | த் | அன் | அள் |
| பாடுகிறான் | பாடு | | | கிறு | | ஆன் |
| பேசுவார் | பேசு | | | வ் | | ஆர் |

## 9.5 மொழியோடு விளையாடுவோம்

### இரட்டைக் கிளவியால் நிரப்புக. (ப.எண்.117)

1. சட சட வென முறிந்தது.
2. கூகூ வெனக் கூவியது.
3. கல கல வெனப் பேசினாள்.
4. மட மட வெனப் பெய்தது.
5. குடு குடு வென ஓடினான்.

## 9.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 118)

1. திருவள்ளுவர்
2. 133 அடி
3. 01.01.2000இல், தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்களால் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது.
4. அரபிக்கடல், வங்காளவிரிகுடா, இந்தியப் பெருங்கடல் ஆகிய மூன்று கடல்களும் சங்கமிக்கும் பகுதியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
5. 133

## 9.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 119 )

இன்றைய உலகில் கல்வி மிகவும் இன்றியமையாதது ஆகும். கல்வி ஒரு மனிதனின் அறிவைத் திறக்கும் திறவுகோலாகும். கல்வி ஒருவரின் அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்திச் சமுதாயத்தில் உயர்நிலையை வழங்குகிறது. ஒருவர் குழந்தைப் பருவத்தில் கல்வி கற்கத் தொடங்கி, வாழ்நாள் முடியும் வரை கற்கலாம். அதற்கு எல்லையே கிடையாது.

Education is very essential in today's world. Education is the key that unlocks a person's knowledge. Education enhances one's knowledge and abilities and provides a higher status in society. One can start learning in childhood and continue learning for the rest of their lives. There is no limit to it.

## 9.9 உயர்நிலைத் திறன்

### கல்வியின் சிறப்பை விளக்கும் வகையில் பாடல் உருவாக்குக. முதலில் தொடங்கும் சொல் அகரவரிசைப்படி அமைய வேண்டும். (பக்க எண்: 120)

அனைவரும் கல்வி கற்போமே!
ஆவலுடன் பள்ளி செல்வோமே!
இனிதே பாடம் பயில்வோமே!
ஈந்து உணவை உண்போமே!
உண்மை பேச அறிவோமே!
ஊர் மெச்ச வாழ்வோமே!
எண் எழுத்தும் கற்போமே!
ஏற்றம் பெற்றே வாழ்வோமே!
ஐவகை நிலத்தை அறிவோமே

ஒன்றாய் சேர்ந்து வாழ்வோமே!
ஓதுவது என்றும் செய்வோமே!
ஔவை வழி நடப்போமே!

## 9.10 செயல் திட்டம்

**கல்வியின் சிறப்பை விளக்கும் திருக்குறள் கருத்துக்களைத் தொகுத்து எழுதி வருக. (பக்க எண்: 120)**

திருக்குறளில் கல்வியின் சிறப்பை விளக்கும் கருத்துக்கள் பல உள்ளன. அவற்றில் சில:

**கேடில் விழுச்செல்வம் கல்வி**:
கல்வியே அழியாத சிறந்த செல்வம். மற்ற செல்வங்கள் எல்லாம் அழியக்கூடியவை.
**கற்க கசடற**:
கற்க வேண்டியவற்றை குற்றமறக் கற்க வேண்டும்.
**கற்றபின் நிற்க அதற்குத் தக**:
கற்ற கல்வியின் படி நடக்க வேண்டும்.
**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப**:
எண்ணும் எழுத்தும் அறிவின் இரு கண்கள் போன்றது.
**உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்:**
கற்றறிந்தோர் செல்வந்தர்களுக்கு முன் ஏழையைப் போல் இருந்தாலும், கற்றல் ஆர்வம் குறையாமல் இருக்க வேண்டும்.
**தொட்டனைத் தூறும் மணற்கேணி:**
தோண்டத் தோண்ட ஊறும் மணற்கேணி போல, கல்வி கற்க கற்க அறிவு பெருகும்.
**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**:
கல்வி கற்றவன் எந்த நாட்டிலும், எந்த ஊரிலும் புகழோடு வாழலாம்.
**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி**:
ஒரு பிறவியில் கற்ற கல்வி ஒருவனுக்கு ஏழு பிறவிக்கும் உதவும்.
**கல்வியே அறிவை பெருக்கும் கருவி:**
கல்வியானது ஒருவனை அறிவாளியாக மாற்றும் ஒரு சிறந்த கருவியாகும்.
கல்வி தொடர்பான திருக்குறள்கள், கல்வியின் இன்றியமையாத தன்மை, அதன் பயன்கள், கற்றலின் அவசியம் மற்றும் கல்லாததால் ஏற்படும் தீமைகளையும் விளக்குகின்றன. எனவே அனைவருக்கும் கல்வி என்பதே நாட்டிற்கு நன்மை தரும்.

# பாடம் – 10

# கல்வி செழித்தால்

## 10.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் தொடர்களிலுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.123)**

1. சுரதா
2. சமூகம்
3. தேன்மழை
4. காவியம்
5. இராசகோபாலன்

**ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.123)**

1. தவறு
2. சரி
3. தவறு
4. சரி
5. தவறு

**இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.123)**

1. கவிஞர் சுரதா, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சிக்கனம், அமுதும் தேனும், நெய்தல் நீர் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

2. பாரதிதாசன் மீது கொண்ட பற்றால் பாரதிதாசனின் இயற்பெயரான 'சுப்புரத்தினம்' என்பதுடன் 'தாசன்' என்பதைச் சேர்த்து, முதலெழுத்துகளைக் கூட்டித் தம்பெயரைச் சுரதா என மாற்றிக்கொண்டார்.

3. காவியம

4. கல்வி

5. கல்வி அறிவு பெற்றவர் உள்ளம் தெளிவு நிறைந்தது.

**ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. – ப.எண்.123**

1. தாமரைப்பூ தேன் அதிகம் கொண்டது. தமிழ்ச் சொல் சுவை மிகுந்தது. கல்வியறிவற்றவர் உள்ளம் இருள் உடையது; கல்வி அறிவு பெற்றவர் உள்ளம் தெளிவு நிறைந்தது. கல்வி செழிப்பதனால் கவிதை பிறக்கும். கற்பதை நன்கு கற்றால் திறமை வளரும். செல்வம் பெருகினால் வாழ்வு வளம்பெறும். திறமையால் மிகுந்த புகழ் வந்து சேரும்.

2. தாமரைப் பூவில் மதுவதிகம்
தனித்தமிழ்ச் சொல்லில் சுவையதிகம்
பாமரர் நெஞ்சில் இருளதிகம்
படித்தவர் நெஞ்சில் தெளிவதிகம்.
கல்வி செழித்தால் கவிதைவரும்
கற்பன கற்றால் திறமை வரும்
செல்வம் திரண்டால் செழிப்புவரும்
திறமை மிகுந்தால் புகழ்வளரும்.

## 10.3 தெரிந்துகொள்வோம்

### வலைப்பூவில் பதிவேற்றம்

**பயிற்சிகள்**

**அ) பொருத்துக. (ப.எண்.127)**

1. இடுகை – வலைப்பூவில் உள்ளடக்கத்தை இடல்
2. பெயரிலி – தன்னை அடையாளப்படுத்தாதவர்
3. வலைப்பதிவர் – வலைப்பூவில் எழுதுபவர்
4. வார்ப்புரு – வலைப்பூச் சட்டகம்

**ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.127)**

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.127)

1. வலைப்பூ என்பது நம் கருத்தை இணையத்தில் அனைவரும் பார்க்கும் வண்ணம் பதிவிட உதவும் இணைய தளம் ஆகும்.

2. வலைப்பூ நாம் நமக்காகவே உருவாக்கிக்கொள்ளும் தளம். அதில் கட்டற்ற சுதந்திரத்தோடு நமது கருத்துகளை வலிமையாக வைக்கலாம். சமூக அக்கறையோடு கருத்துகளை உலகோடு பகிர்ந்துகொள்ள வலைப்பூ மிகச் சிறந்த படைப்புக்களமாக விளங்குகிறது. புதினம், நாடகம், சிறுகதை, நேர்காணல்கள், மொழிபெயர்ப்பு, கட்டுரைகள் ஆகியவற்றை நாம் பதிவேற்றலாம்.

3. மாறன், 'ஆர்.பாலகிருஷ்ணன்' அவர்களின் 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்னும் நூலைப் படித்துவிட்டு அதற்கான பின்னூட்டம் எழுதியிருந்தான்.

4. வெப்லாக் (Weblog) என்ற பெயர் முதன்முதலில் 17–12–1997இல் ஜான் பார்கெர் (Jorn Barger) என்பவரால் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. குறுக்க வடிவமான blog என்ற சொல்லைப் பீட்டர் மெர்கோல்ஸ் (Peter Merholz) என்பவரே முதன்முதலில் பயன்படுத்தினார்.

5. வலைப்பூவில் தமிழ்மொழி பதிவு ஜனவரி 01, 2003 ஆண்டு பயன்பாட்டுக்கு வந்தது.

### ஈ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.127)

1. தகவல் தொடர்புச் சாதனங்களின் வருகைக்கு முன் பிறருடன் நம்மால் எளிதாகத் தொடர்புகொள்ள இயலவில்லை. இக்காலத்தில் இணைய வசதியின் காரணமாக நொடிப் பொழுதில் பிறருடன் தொடர்புகொண்டு நம் கருத்தைப் பகிரவும் பிறர் கருத்தைப் பெறவும் வலைத்தளங்கள் பயன்படுகின்றன. அத்தகைய வலைதளங்களுக்கு வலைப்பூ என்று பெயர். நமக்கென்று தனி வலைப்பூவை உருவாக்க முடியும். Blog என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் வலைப்பூ.

   வெப்லாக் (Weblog) என்ற பெயர் முதன்முதலில் 17–12–1997இல் ஜான் பார்கெர் (Jorn Barger) என்பவரால் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. குறுக்க வடிவமான blog என்ற சொல்லைப் பீட்டர் மெர்கோல்ஸ் (Peter Merholz) என்பவரே முதன்முதலில் பயன்படுத்தினார்.

2. வலைப்பூ கணக்கைத் தொடங்கி சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து தினம் ஒரு தகவலை பதிவிடுவேன். வலைப்பூ நாம் நமக்காகவே உருவாக்கிக்கொள்ளும் தளம். அதில் கட்டற்ற சுதந்திரத்தோடு நமது கருத்துகளை வலிமையாக வைக்கலாம். சமூக அக்கறையோடு கருத்துகளை உலகோடு பகிர்ந்துகொள்ள வலைப்பூ மிகச் சிறந்த படைப்புக்களமாக விளங்குகிறது. புதினம், நாடகம், சிறுகதை, நேர்காணல்கள், மொழிபெயர்ப்பு, கட்டுரைகள் ஆகியவற்றை பற்றியும் பதிவிடுவேன்.

## 10.4 தெரிந்துகொள்வோம்

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.129)

1. (அ) சென்ற பையன், படித்த மாணவன்
2. (ஈ) வேங்கை, பலகை

### ஆ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.129)

1. ஒரு சொல் தனித்து வந்து ஒரு பொருளைத் தந்தால் அது தனிமொழி எனப்படும்.
(எ.கா) செல், போ, கண், மரம்

2. ஒரு சொல்லே தனிமொழியாக நின்று ஒரு பொருளையும், தொடர்மொழியாகப் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்தால் அது பொதுமொழி எனப்படும். அதாவது, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக வரும் சொல்லே பொதுமொழி.
(எ.கா) வேங்கை

3. சான்று தந்து கட்டங்களை நிறைவு செய்க.

| வ.எண். | சொல் | தனிமொழி | தொடர்மொழி | பொதுமொழி |
|---|---|---|---|---|
| 1. | செல் | செல் | – | – |
| 2. | அறநூல் படி | – | அறநூல் படி | – |
| 3. | அந்தமான் | – | – | அந்தமான் |

4. பின்வரும் தொடர்களில் உள்ள தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழிகளைக் கண்டு எழுதுக.

அ. தொடர்மொழி, பொது மொழி

ஆ. பொதுமொழி

இ. பொதுமொழி

## 10.5 கருத்து விளக்கப் படம்

**வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 130)**

1. மீனாட்சி சுந்தரனார் கல்வி நிறுவனம்
2. 48 நாட்கள் நடைபெற்றது (17 + 28 + 3)
3. தொட்டுத் தொட்டுப் பார்த்தால் அது வெறும் காகிதம், தொடர்ந்து படித்தால் அதுவே வெற்றியின் ஆயுதம்.
4. 10%
5. காலை 11.00 மணிக்குத் தொடங்கி இரவு 9.30 மணிக்கு நிறைவடையும்.

## 10.6 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 132)**

1. இந்திர மோகனா

2. சமகால எழுத்தாளர்கள் இவரை 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்று போற்றினர்.

3. வை.மு.கோதைநாயகி தமது முதல் புதினத்தை பக்கத்து வீட்டுப் பெண் பட்டம்மாளை வைத்து எழுதினார்.

4. இரண்டாவது புதினமான 'வைதேகி'யைத் தானே தன்னுடைய கையெழுத்தில் எழுதினார்.

5. வை.மு.கோதை நாயகி தமிழகத்தைச் சேர்ந்த புதின எழுத்தாளர் ஆவார். துப்பறியும் புதினம் எழுதிய முதல் எழுத்தாளர். மேடைப் பேச்சாளர், கவிஞர், சமூகநல ஊழியர், இதழாசிரியர், இந்திய விடுதலைக்காகப் போராடியவர் எனப் பன்முகம் கொண்டவர்.

## 10.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 132)

Everybody is a genius. But if you judge a fish by its ability to climb a tree, it will live its whole life believing that it is stupid. – **Albert Einstein**

எல்லோரும் ஒரு மேதை. ஆனால் ஒரு மீனை அதன் மரத்தில் ஏறும் திறனை வைத்து நீங்கள் தீர்மானித்தால், அது தனது வாழ்நாள் முழுவதும் தன்னை முட்டாள் என்று நம்பியே வாழும். – ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

## 10.9 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் உரைப்பகுதியில், வண்ணமிட்ட சொற்களுக்குரிய பொருளை எழுதுக.**

1. இனம் – குழு
2. பண்டமாற்று – பொருளைக் கொடுத்து பொருள் பெறுதல்
3. வணிகம் – வியாபாரம்
4. கணக்கீட்டுக் கருவிகள் – அளவைகள்
5. கணினி – கணிப்பொறி
6. மின்னணுக் கருவி – மின்னாற்றலால் இயங்கும் கருவி
7. பயனர் – உபயோகிப்பாளர்
8. உள்ளீடு – தட்டச்சு முறையில் கணினிக்குக் தகவல்களைக் கொடுத்தல்

# பாடம் – 11

# பட்டினப்பாலை

## 11.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.136)

1. 301
2. கரிகால் பெருவளத்தானின்
3. காவிரிப்பூம்பட்டினம்
4. கடியலூர் உருத்திரங்கண்ணனார்
5. பழிக்கு அஞ்சி

#### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. கொடுக்கும் பொருள்களைக் குறைவின்றிக் கொடுப்பர். அதற்கு இணையாகப் பெறும் பொருள்களை அதிகமாகவும் பெற மாட்டார்கள்.

2. பட்டினப்பாலை, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 301 பாடல் அடிகளைக் கொண்டது. இந்நூல் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகளை எடுத்துக் கூறுகிறது. சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைச் சொல்வதாலேயே பட்டினப்பாலை என்னும் பெயர் பெற்றது.

3. உருத்திரக்கண்ணனார் பத்துப்பாட்டில் இரண்டு நூல்களை எழுதியுள்ளார். அவை பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை.

4. வணிகர்கள், தம் குடிக்குப் பழிச்சொல் வருமென அஞ்சி, பொய்யை தவிர்த்து உண்மை பேசுபவராய் இருந்தனர்.

5. "நெடு நுகத்துப் பகல் போல" – நீண்ட நுகத்தடியில் தைத்த கொழுமுனை போல (அ) கலப்பையில் எருதுகளைப் பிணைக்கும் நீண்ட தடியில் வைத்த கொழுமுனை போல

**இ) பின்வரும் வினாக்களுக்கு விடை விரிவாக எழுதுக. (ப.எண்.136)**

1, வணிகர்கள், உழவர்கள் உழவு செய்யும் நீண்ட நுகத்தடியில் தைத்த கொழுமுனை போல, நடுவுநிலை என்னும் குணம் நிலைக்கப்பெற்ற நல்ல நெஞ்சினராய் இருந்தனர். தம் குடிக்குப் பழிச்சொல் வருமென அஞ்சி, பொய்மை தவிர்த்து உண்மை பேசுபவராய் இருந்தனர். தம்முடைய பொருளையும் பிறருடைய பொருளையும் ஒன்றாகவே எண்ணினர். தாம் கொடுக்கும் பொருள்களைக் குறைவின்றிக் கொடுப்பர். அதற்கு இணையாகப் பெறும் பொருள்களையும் அதிகமாகப் பெற மாட்டார்கள். பல்வகையான பண்டங்களையும் விலைசொல்லி விற்கும் வணிகத்தைக் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்கள் சிறப்பாகச் செய்தனர்.

2. "......... உழவர்
நெடு நுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நல் நெஞ்சினோர்
வடு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்..." (205 – 211)

## 11.3 படிப்போம்

## தமிழரின் அயல்நாட்டு வணிகம்

### பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.139)**

1. (அ) மஸ்லின்
2. (அ) வங்கக்கடல்
3. (ஆ) எரித்தியக் கடலின் பெரிப்ளூஸ்
4. (ஈ) யுவான் சுவாங்

### ஆ) பொருத்துக. (ப.எண்.139)

1. மெகஸ்தனிஸ் – இண்டிகா
2. பிளினி – நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா
3. தென்கடல் வாணிபச் செலவு – பிரிகே
4. மார்க்கோ போலோ – வெனிஸ் பயணி

### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.139)

1. தங்கம் தமிழ்நாட்டிற்கு வருவதைக் கட்டுப்படுத்த உரோம் மன்னர் வெஸ்பாவியன் சட்டங்கள் இயற்றினார்.

2. இரண்டாம் நரசிம்ம பல்லவன், ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் போன்ற வேந்தர்கள் சீனாவிற்குத் தூதுவர்களை அனுப்பினர்.

### ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. – ப.எண்.139

1. தமிழர்கள் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து விலையுயர்ந்த கற்களையும், முத்துகளையும், பட்டாடைகளையும், மஸ்லின் துணிகளையும், ஆபரணங்களையும், வாசனைப் பொருள்களையும் ஏற்றுமதி செய்தனர்.

2. உரோமானிய பயணியான ஸ்திராபோவின் வரலாற்றுக் குறிப்பு, தமிழக அரசுகளுக்கும் உரோமப் பேரரசுக்கும் இருந்த அரசியல் வணிகத் தொடர்பினை விளக்குகிறது. அகஸ்டஸ் மன்னரிடம் பாண்டிய நாட்டினர் தூதராகச் சென்றதும், பாண்டியர் தலைநகரம் கொற்கையிலிருந்து மதுரைக்கு மாறியதும் ஸ்திராபோவின் குறிப்புகளால் தெரிய வருகின்றன.

   பிளினி (Pliny the Elder) தனது 'நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா' (Naturalis Historia/The Natural History) நூலில் இந்தியாவைத் தங்கம், வெள்ளி போன்ற 'அரிய உலோகங்களின் தொட்டி' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்நூலில் தமிழகத்தின் மேலைக் கடற்கரையில் இருந்த துறைமுகங்கள் பலவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

   சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்கு வருகை தந்திருந்த கிரேக்கத் தூதர் மெகஸ்தனிஸ் தன்னுடைய 'இண்டிகா' என்னும் நூலில் கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் பாண்டிய அரசு வணிகத்தில் சிறப்புடன் விளங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் பெயர் தெரியாத 'தென்கடல் வாணிபச் செலவு' என்ற நூல் தமிழகத்தைப் 'பிரிகே' என்று குறிப்பிட்டு விளக்குகிறது. எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ் என்ற கிரேக்க நூல் தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பு பற்றிய செய்திகளை அறிவிக்கிறது.

## 11.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.141)**

1. (ஈ) அன், ஆன்
2. (அ) என், ஏன்
3. (ஆ) மார், கள்
4. (இ) பலவின்பால் விகுதி

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.141)**

1. திணை இரண்டு வகைப்படும். அவை உயர்திணை, அஃறிணை.
2. இடம் மூன்று வகைப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை
3. பால் ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால்.

**இ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக. (ப.எண்.141)**

1. படர்க்கை விகுதிகள்

| எண், | இடம் | விகுதிகள் | சான்று |
|---|---|---|---|
| படர்க்கை | படர்க்கை ஆண்பால் விகுதி | அன், ஆன் | ஒருவன், கோமான் |
| | படர்க்கை பெண்பால் விகுதி | அள், ஆள் | வந்தனள், அடியாள் |
| | படர்க்கை பலர்பால் விகுதி | அர், ஆர், ப, மார். இர், கள் | தோழியர், தேசத்தார், நடப்ப, தாய்மார், மகளிர், அரசர்கள் |
| | படர்க்கை ஒன்றன்பால் விகுதி | து, று, டு | அது, ஒடிற்று, பொருட்டு |
| | படர்க்கை பலவின்பால் விகுதி | அ, ஆ | நடந்தன, வளரா, மேயா |

## 11.5 மொழியோடு விளையாடுவோம்

**வரிசை மாறியுள்ள பழமொழிகளைச் சரியான வரிசையில் எழுதுக. (ப.எண்.142)**

1. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
2. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
3. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
4. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவாது.
5. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.

## 11.6 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (ப.எண்.143)**

1. தொழிற்பாடல்கள்

2. தொழிலாளர்கள் உழைக்கும்போது, உடற்சோர்வைப் பொருட்படுத்தாமலும் விரைவாகப் பணிபுரியவும் தொழிற்பாடல்கள் பாடப்படுகின்றன.

3. ஏற்றப்பாடல், ஏர்ப்பாடல், நடவுப்பாடல், களையெடுப்புப்பாடல், அறுவடைப்பாடல், மீன்பிடிப்பாடல் என்று தொழிலுக்கு ஏற்றவாறு வகைப்படுத்தப்பட்டன.

4. கப்பற்பாடல்களின் குறியீடு "ஏலேலோ ஐலசா", "ஏலைஏலோ சல சலா"

5. தொழிற்பாடல்கள் தனி இலக்கிய வகையாக அறியப்படுகின்றன.

## 11.7. மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 143)

மனிதன் சமூகமாக வாழ்ந்தபோது தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்துவிட்டுத் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொண்டான். இதனைப் பண்டமாற்று வணிகம் என்றனர்; இதுவே பின்னர் நாணயமுறை வணிகமாக வளர்ச்சியடைந்தது.

When man lived in society, he gave away what he had and received what he needed. They called this barter trade; This later developed into a currency-based business.

## 11.9 உயர்நிலைத் திறன்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 144)

1. கவிஞர் அன்பனே என்று ஓடக்காரனை அழைக்கிறார்.
2. கவிஞர் அக்கரைக்குப் போக விரும்பினார்.
3. மகிழ்ச்சி எனும் பொருள் தரும் வேறு சொற்கள் விழைவு, இன்பம், களி, திளைப்பு
4. பரிவு என்ற சொல்லின் பொருள் இரக்கம்.
5. மூன்று முறை வந்துள்ள சொல் **எத்தனை** ஆகும்.

# பாடம் – 12
# தொழிலின் சிறப்பு

## 12.2 படிப்போம்

### பயிற்சிகள்

**அ) பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை எழுதுக. (ப.எண்.148)**

1. அடிகளாசிரியர்
2. அடிகளாசிரியரின் இயற்பெயர் குருசாமி
3. சிறுவர் இலக்கியம்

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.148)**

1. தொல்காப்பியச் செம்மல், செந்நாப்புலவர், தமிழ்ப்பேரவைச் செம்மல் என உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அடிகளாசிரியரைப் பாராட்டியுள்ளது.

2. உழவுத்தொழில் சிறக்க அடிகளாசிரியர் காட்டையும், மேட்டையும் திருத்தி வயல்கள் பலபல செய்திட வேண்டும். வயல்களுக்கு நீர் கொண்டுவர அணைகள், ஏரிகள், ஆறுகள், குளங்கள் போன்றவற்றை அமைத்திட வேண்டும் என்கிறார்.

**இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.148)**

1. நாடும் நாமும் வாழ்ந்திட நல்ல தொழிலைச் செய்திட வேண்டும். காட்டையும் மேட்டையும் திருத்தி வயல்கள் பலபல செய்திட வேண்டும். வயல்களுக்கு நீர் கொண்டுவர அணைகள், ஏரிகள், ஆறுகள், குளங்கள் அமைத்திட வேண்டும். இவை எல்லாம் செய்தால்தான் இணையில்லாத உழுதொழில் சிறக்கும். அதனால் எல்லா உணவுகளையும் படைத்திட முடியும்.

   இரும்பு தொடர்பான தொழில்கள் பல செய்திட வேண்டும். இயந்திரம் பல செய்திட வேண்டும். கரும்பாலை, பஞ்சாலை மற்றும் பல்வேறு தொழிற்சாலைகள் அமைத்திட வேண்டும். போக்குவரத்திற்காக மிதிவண்டி, மகிழுந்து, தொடர்வண்டி, கப்பல், வானூர்தி போன்றவை செய்திடவேண்டும் என அடிகளாசிரியர் குறிப்பிடுகிறார். இவ்வாறு தனது பாடலில் வேளாண்மை, போக்குவரத்து சாதனங்கள் உற்பத்தி, தொழிற்சாலைகள் பல அமைத்தல் போன்ற தொழில்களைப் பாடியுள்ளார்.

## 12.3 படிப்போம்

# வாரன் எட்வர்ட் பஃபெட்

### பயிற்சிகள்

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.150)**

1. வாரன் பஃபெட்
2. 'ஒன் தௌசண்ட் வேஸ் டு மேக் 1000 டாலர்' (one thousand way to make $1000)
3. பின் பால் (pin ball)
4. பெர்க்ஷைர் ஹேதவே

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.150)**

1. வாரன் பஃபெட் 1930 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஒமாஹா என்ற இடத்தில் பிறந்தார்.

2. பஃபெட் சிறுவயதில் வீடுவீடாகச் சென்று நாளிதழ் போடும் வேலையைச் செய்தார். சுவிங்கம், கோக–கோலா, கோல்ப் பந்து போன்றவற்றை விற்பனை செய்தார்.

3. பஃபெட் முதன் முதலில் 'சிட்டீஸ் சர்வீஸ்' என்ற நிறுவனத்தின் பங்குகளை வாங்கினார்.

4. பஃபெட் முதல் வருமான வரியை தனது 14வது வயதில் செலுத்தினார்.

**இ) பின்வரும் வினாவிற்கு விரிவான விடை எழுதுக. – ப.எண்.150**

1. முதலீடு என்று வந்துவிட்டாலே அதற்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் பார்க்கப்படுபவர் வாரன் பஃபெட். உலகின் மிகப் பெரும் பங்கு முதலீட்டாளர், புத்தக எழுத்தாளர், சமூக ஆர்வலர் எனப் பல முகங்கள் இவருக்கு இருக்கின்றன.

   இவர் 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஒமாஹா என்ற இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் வாரன் எட்வர்ட் பஃபெட். சிறு வயதில் ஒமாஹா நூலகத்தில் இருந்த 'ஒன் தௌசண்ட் வேஸ் டு மேக் 1000 டாலர்' (One thousand ways to make $1000 ) என்ற புத்தகத்தால் ஈர்க்கப்பட்டார்.

வீடுவீடாகச் சென்று நாளிதழ் போடும் வேலையைச் செய்தார். சுவிங்கம், கோககோலா, கோல்ப் பந்து போன்றவற்றை விற்பனை செய்தார். நண்பனுடன் சேர்ந்து பின்பால் (Pinball) இயந்திரம் ஒன்றை வாங்கினார். அதை முடிதிருத்தும் நிலையத்தில் வைத்து அதன் மூலம் சம்பாதிக்கத் தொடங்கினார். இதில் நல்ல இலாபம் கிடைக்கவே நிறைய இடங்களில் இதுபோல நிறைய இயந்திரங்களை வைத்துச் சம்பாதித்தார்.

இதுபோலப் பணம் சம்பாதிப்பதில் அவரது அறிவுத்திறன் அதிகமாகவே இருந்தது. வாரன் பஃபெட்டுக்குப் பங்குச்சந்தை மீது அதிக ஆர்வம் இருந்தது. தனது 11ஆவது வயதிலேயே பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டார். அப்போது 'சிட்டீஸ் சர்வீஸ்' என்ற நிறுவனத்தின் பங்குகளை வாங்கினார்.

உலகின் பெரிய பணக்காரர் வரிசையில் இவரின் பெயரும் இடம்பெறும் அளவிற்கு உயர்ந்துள்ளார்.

## 12.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.151)**

1. (ஈ) கொதி
2. (அ) இயற்றியவன்
3. (ஆ) விளையாடு

**ஆ) பின்வரும் வினைமுற்றுகளை வினையாலணையும் பெயராக மாற்றுக. – ப.எண்.153**

| வ. எண் | வினைமுற்று | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1. | ஆடினாள் | ஆடியவள் |
| 2. | வீழ்ந்தார் | வீழ்ந்தவர் |
| 3. | வென்றான் | வென்றவன் |
| 4. | வந்தார் | வந்தவர் |

**இ) பின்வரும் வேர்ச்சொற்களைத் தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயராக மாற்றுக. – ப.எண்.153**

| வ. எண் | வேர்ச்சொல் | தொழிற்பெயர் | முதனிலைத் தொழிற்பெயர் | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|---|---|
| 1. | படு | படுதல் | படு | பாடு |
| 2. | பெறு | பெறுதல் | பெறு | பேறு |
| 3. | சுடு | சுடுதல் | சுடு | சூடு |

**ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.153)**

1. செயலைக் குறிக்காமல், செயல் செய்தவரைக் குறித்து வருவது வினையாலணையும் பெயர். இது, வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.

2. தொழிற்பெயரின் விகுதியைப் பெறாத முதனிலை, திரிந்து (மாறுபட்டு) வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும். எ.கா. கெடுவான் கேடு நினைப்பான். இத்தொடரில் கெடு என்னும் முதனிலை கேடு என்றும் மாறி வந்துள்ளது. எனவே, முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றழைக்கப்படுகின்றது.

3. வினையாலணையும் பெயருக்கும் தொழிற்பெயருக்கும் உள்ள வேறுபாடுகள்

| வ. எண் | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1 | தொழிலுக்குப் பெயராக வரும் | தொழிலைச் செய்த கருத்தாவிற்குப் பெயராக வரும். |
| 2 | படர்க்கை இடத்தில் மட்டும் வரும் | மூவிடத்திலும் வரும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) |
| 3 | காலம் காட்டாது | காலம் காட்டும் |
| 4 | திணை, பால், எண், இடம் காட்டாது | திணை, பால், எண், இடம் காட்டும். |

## 12.5 கருத்து விளக்கப் படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 154)

1. தேசிய அளவிலான நெல் திருவிழா – 2023
2. 08.06.2023 மற்றும் 09.06.2023 ஆகிய நாட்களில் நடைபெறுகிறது.
3. சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள், நுகர்வோர்கள் ஆகியோர் நெல் திருவிழாவில் பங்கேற்கலாம்.
4. இத்திருவிழா 13 ஆண்டுகளாக நடைபெறுகிறது.
5. பேரணி, கண்காட்சி, கருத்தரங்கம், கலை நிகழ்ச்சி போன்ற நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

## 12.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 156)

1. ரத்தன் டாடா
2. ரத்தன் டாடா சூரத்தில் 1937ஆம் ஆண்டு பிறந்தார்.
3. 30 ஆண்டுகள்
4. ரத்தன் டாடா ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் படித்தார்.
5. உப்பு, தேநீர், கைக்கடிகாரம், தங்கம், இரும்பு, மின்சாரம், தகவல் தொழில்நுட்பம், வாகன உற்பத்தி என ஒவ்வொன்றிலும் டாடாவின் பங்கு உண்டு. இவை யாவும் டாடா குழுமத்தின் தயாரிப்புகள் ஆகும்.

## 12.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 156 )

தொழில் முனைவோர் என்பவர் சொந்தமாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி, வளர்ச்சியடையச் செய்பவர்; நிச்சயமற்ற சூழ்நிலையில் இடர்ப்பாடுகளைக் களைந்து, தனது இலக்கை அடையும் திறன் பெற்றவர்; புதுமைகளை மேற்கொள்பவர்; தனித்தன்மையும் தன்னம்பிக்கையும் கொண்டவர்.

An entrepreneur is someone who creates and develops their own company; Who has the ability to overcome obstacles and achieve their goals in uncertain situations; They are innovators; with individuality and self–confidence.

## 12.9 உயர்நிலைத் திறன்

### பின்வரும் குறிப்புகளைப் படித்து, உரைப்பகுதியாக எழுதுக. (பக்க எண்:157)

உலக புகழ் பெற்ற இன்ஃபோசிஸ் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவியவர் நா.ரா. நாராயணமூர்த்தி ஆவார். இவர் ஆகஸ்ட் 20, 1946ஆம் ஆண்டு கர்நாடகத்தில் பிறந்தார். இவர் 1967இல் மைசூர் பல்கலைக் கழகத்தில் மின் பொறியியல் பட்டமும், 1969இல் இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்றார். நாரயணமூர்த்தி அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கழகத்தில், கணினித் துறையில் வேலை செய்தார். பின்னர் எஸ்.ஈ.எஸ்.ஏ. நிறுவனம், ஃபிரான்ஸ் பணியாற்றினார். தனது கடும் உழைப்பால் இன்ஃபோசிஸ் நிறுவனத்தைத் தொடங்கி அதன் செயல்குழுத் தலைவர், தலைமை ஆலோசகர் போன்ற பதவிகளை வகிக்கிறார். இவருக்கு இந்தியாவின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூஷண் விருதை வழங்கி கௌரவித்துள்ளது.s

# பாடம் – 13

# சிலப்பதிகாரம்

## 13.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) பொருத்துக. (ப.எண்.161)

1. ஒருமுக எழினி – ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்வது
2. பொருமுக எழினி – இருபுறத்திலிருந்தும் நடுவில் பொருந்துவது
3. கரந்துவரல் எழினி – மேலிருந்து கீழ் வருவது
4. அரங்கு – நடன மேடை

#### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.161)

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. தவறு

#### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.161)

1. ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்பன மூவகை எழினிகள் ஆகும்.

2. இளங்கோவடிகள் சேர மன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மற்றும் நற்சோணை ஆகியோரின் மகன், மற்றும் சேரன் செங்குட்டுவனின் சகோதரர். இளவரசராக இருந்தும் அரச பதவியைத் துறந்து துறவறம் மேற்கொண்டார். இளங்கோவடிகள் சமண மதத்தைச் சார்ந்தவர். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

3. அரங்கமானது தரையிலிருந்து ஒரு கோல் அளவு உயரமும், ஏழு கோல் அகலமும் எட்டு கோல் நீளமும் உடையதாக அமைக்கப்பட்டது. அரங்கின் மேல் அமைப்பு உத்தரம் எனப்படும். இது பலகைகளால் மூடப்பட்டிருக்கும். இந்த உத்தரப் பலகைக்கும் தளம் பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு இடைவெளி அமைக்கப்பட்டிருக்கும். அரங்குக்கு உள்ளே வரவும் வெளியே செல்லவும்

தனித்தனியே இரண்டு வாயில்கள் இருக்கும். அரங்கில் அமைக்கப்பட்ட தூண்களின் நிழல்கள் அரங்கில் விழாதபடி விளக்கும் அமைக்கப்பட்டிருக்கும்.

4. சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களை உடையது. அவை புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்பவையாகும்.

5. ஒரு கோல் அளவு என்பது தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாகும்.

### ஈ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.161)

1. சிலப்பதிகாரம் குறிப்பிடும் நடன அரங்கின் அமைப்பு

அரங்கமானது தரையிலிருந்து ஒருகோல் அளவு உயரத்தில் இருக்குமாறு அமைக்கப்பட்டது. அதன்மேல் பலகைகள் இட்டுத் தளம் அமைத்தனர். அரங்கமானது ஏழு கோல் அகலமும் எட்டு கோல் நீளமும் உடையதாக இருந்தது. அரங்கின் மேல் அமைப்பு உத்தரம் எனப்படும். உத்தரம், பலகைகளால் மூடப்பட்டிருந்தது. உத்தரப் பலகைக்கும் தளப் பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு இடைவெளி இருந்தது. அரங்குக்கு உள்ளே வரவும் வெளியே செல்லவும் தனித்தனியே இரண்டு வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அரங்கில் அமைக்கப்பட்ட தூண்களின் நிழல்கள் அரங்கில் விழாதபடி விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

மேலும், நடன அரங்கில் மூன்று வகையான திரைச்சீலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி ஆகியனவாகும்.

## 13.3 படிப்போம்

## தெருக்கூத்து

### பயிற்சிகள்

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.164)

1. கூத்து
2. தென்னை
3. அரிதாரம்
4. கோமாளி
5. நாடக

### ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.164)

1. தெருக்கூத்திற்கான திறந்தவெளி மேடை வீதிகளிலும், நாற்சந்திகளிலும், கோயில்களுக்கு அருகிலும் அமைக்கப்படும். இம்மேடையின் மேற்பகுதியைத் தென்னை ஓலைகளால் அமைத்திருப்பர். மேடையை, நடிகர்கள் வருவதற்கு முன்பு வெள்ளைத்துணியால் மறைத்திருப்பர். நடிகர் வந்து அதன் பின்புறம் நின்றதும் திரை அகற்றப்படும்.

2. தெருக்கூத்தில் மிருதங்கம், டோலக், ஜால்ரா, புல்லாங்குழல், ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகள் பெரும்பாலும் பயன்படுத்தப் பெறுகின்றன. இவை 'பக்க வாக்கியங்கள்' எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

3. தெருக்கூத்தின் கதைகள் மக்களுக்கு நன்கு அறிமுகமான தொன்மை இலக்கியங்கள், நாட்டுப்புறக்கதைகள், புராண இதிகாசக் கதைகள் தெருக்கூத்துக்கான கதைகளாக உள்ளன. எனினும் கால மாற்றத்திற்கேற்ப சமகாலத்தில் நடைபெறும் நிகழ்வுகள் தெருக்கூத்தில் இடம்பெறும். மதுரை வீரன், பவளக்கொடி, நல்லதங்காள், அர்ச்சுனன் தபசு, ஆரவல்லி சூரவல்லி, பாரதக்கூத்து, காத்தவராயன், சித்திராங்கி போன்றவை குறிப்பிடத்தக்க தெருக்கூத்துக் கதைகளாகும்.

4. தெருக்கூத்துக்கான ஒப்பனை தனித்துவம் வாய்ந்தது. கதாப்பாத்திரங்களை வேறுபடுத்தவும், பொலிவுபெறச் செய்யவும் ஒப்பனை உதவுகிறது. விலை குறைந்த மற்றும் இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருள்களான அரிதாரம், கரிப்பொடி, காக்காப்பொன் ஆகியன முகத்தில் பூசப்படும் ஒப்பனைப் பொருள்களாகும்.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.164)

1. கிராமங்களில் நாட்டுப்புறக்கலைகளில் ஒன்றாகக் கூத்து நடைபெற்று வந்தது. தெருக்களின் ஓரங்களின் இடம் அமைத்து நிகழ்த்துவதால் இதைத் தெருக்கூத்து என்றழைத்தனர்.

   தொடக்க காலத்தில் ஒளியமைப்புக்காகத் தெருக்கூத்து மேடையில் 'தீவட்டிகள்' பயன்படுத்தப்பட்டன. தற்போது மின்விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

தெருக்கூத்திற்கான திறந்தவெளி மேடை வீதிகளிலும், நாற்சந்திகளிலும், கோயில்களுக்கு அருகிலும் அமைக்கப்படும். இம்மேடையின் மேற்பகுதியைத் தென்னை ஓலைகளால் அமைத்திருப்பர்.

தெருக்கூத்தில் மிருதங்கம், டோலக், ஜால்ரா, புல்லாங்குழல், ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகள் பக்க வாத்தியங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தெருக்கூத்தில் கதாப்பாத்திரங்களை வேறுபடுத்தவும், பொலிவுபெறச் செய்யவும் ஒப்பனை உதவுகிறது.

5. மக்களுக்கு நன்கு அறிமுகமான தொன்மை இலக்கியங்கள், நாட்டுப்புறக்கதைகள், புராண இதிகாசக் கதைகள் தெருக்கூத்துக்கான கதைகளாக உள்ளன. எனினும் கால மாற்றத்திற்கேற்ப சமகாலத்தில் நடைபெறும் நிகழ்வுகள் தெருக்கூத்தில் இடம்பெறும். மதுரை வீரன், பவளக்கொடி, நல்லதங்காள், அர்ச்சுனன் தபசு, ஆரவல்லி சூரவல்லி, பாரதக்கூத்து, காத்தவராயன், சித்திராங்கி போன்றவை குறிப்பிடத்தக்க தெருக்கூத்துக் கதைகளாகும்.

## 13.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (ப.எண்.168)**

1. மங்கலம்
2. இடக்கரடக்கல்
3. குழுஉக்குறி
4. நன்காடு
5. பறி

**ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.168)**

1. சரி
2. சரி
3. தவறு
4. தவறு
5. சரி

**இ) பொருத்துக. ( ப.எண்.167)**

| | | | |
|---|---|---|---|
| 1. | இடக்கரடக்கல் | – | வாய் பூசி வந்தேன் |
| 2. | மங்கலம் | – | விளக்கைக் குளிர வை |
| 3. | குழூஉக்குறி | – | ஆடையைக் காரை என்பர் |
| 4. | மரூஉ | – | தஞ்சை |
| 5. | இலக்கணப்போலி | – | நகர்ப்புறம் |

**ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.168)**

1. எந்தப் பொருளை எந்தச் சொல்லால் நம் முன்னோர் வழங்கி வந்தனரோ அவ்வாறே தொடர்ந்து வழங்கி வருவதையே வழக்கு என்பர்.

2. வழக்கு இரண்டு வகைப்படும்: அவை, இயல்பு வழக்கு தகுதி வழக்கு.

3. ஒரு பொருளைச் சுட்டுவதற்கு எந்தச் சொல் இயல்பாக அமைகிறதோ அச்சொல் இயல்பு வழக்குச் சொல் எனப்படும். இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். அவை, இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ.

4. பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொல்லை நீக்கித் தகுதியான வேறு சொல்லால் சொல்வது தகுதி வழக்கு எனப்படும். தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி

5. மருவி வழங்கி வரும் சொற்கள் மரூஉச் சொற்கள் ஆகும். காலமாற்றத்தினால் எழுத்துகளோ ஒலியோ சிதைவுற்று வழங்கி வருவதாகும். எ.கா. தஞ்சாவூர் – தஞ்சை, திருநெல்வேலி – நெல்லை.

6. மங்கலம் அல்லாத சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது மங்கலம் என்பர். சான்று:
   1. விளக்கை அணை – விளக்கைக் குளிரவை
   2. சுடுகாடு – நன்காடு

## 13.5 மொழியோடு விளையாடுவோம்

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு விடுபட்ட இடங்களைச் சொற்களால் நிரப்புக. (ப.எண்.169)**

| மேலிருந்து கீழ் | கீழிருந்து மேல் |
|---|---|
| 1. மரம்<br>2. சட்டை<br>3. ஒட்டகம்<br>4. பாகற்காய்<br>5. பசு | 5. தம்பி<br>10. குரங்கு<br>11. பல்லி |
| **இடமிருந்து வலம்**<br>1. மஞ்சள்<br>2. பட்டம்<br>8. நாற்காலி<br>9. படகு | **வலமிருந்து இடம்**<br>7. கழுதை |

## 13.6 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள் – விடைகள் (ப.எண்.170)**

1. கைத்தறி நெசவுக்கலை
2. ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு 7ஆம் தேதி இந்தியாவில் தேசியக் கைத்தறி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது
3. கைத்தறி ஆதரவுத்திட்டம்
4. 95%
5. இந்தியாவில் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு அதிகமான வருமானத்தைக் கைத்தறி நெசவுத்தொழில் வழங்குகிறது

## 13.7. மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 170)

Indian culture is one of the age-old cultures in the world established around 5000 years ago. The supremacy and diversity of Indian culture cannot be denied. There is a common buzzword for India "Unity in diversity" which implies that India is a diverse and huge country. where people of different religions and traditions live together in great harmony and peace.

இந்திய கலாச்சாரம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட உலகின் பழமையான கலாச்சாரங்களில் ஒன்றாகும். இந்திய கலாச்சாரத்தின் மேன்மை மற்றும் பன்முகத்தன்மையை மறுக்க முடியாது. இந்தியாவிற்கு "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற பொதுவான சொல் உள்ளது. இது இந்தியா ஒரு பன்முகத்தன்மை கொண்ட மற்றும் மிகப்பெரிய நாடு என்பதைக் குறிக்கிறது. அங்கு பல்வேறு மதங்கள் மற்றும் மரபுகளைச் சேர்ந்த மக்கள் மிகுந்த நல்லிணக்கத்துடனும் அமைதியுடனும் ஒன்றாக வாழ்கின்றனர்.

## 13.9 உயர்நிலைத் திறன்

**பின்வரும் பாடலைப் படித்து, அதன் நயங்களைக் (பொருள், ஒலி, கற்பனை) கூறுக. (ப.எண்.171)**

இது ஒரு தாலாட்டுப் பாடல். தாய் தனது குழந்தையைத் தூங்க வைக்கப் பாடுகிறாள். அதனால் ஒலிப்பு முறை ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் சொற்கள் அமைந்துள்ளன.

சான்று: பந்தல் – பலதோஷம்

சந்தியிலே – சாரல்

பூமியிலே – புழுதி

தோள் – தொடை

மடி – மார்

ஒரு தாய் தன் குழந்தை மீது இருக்கும் பாசத்தினால் தனது கற்பனை வளங்கள் அனைத்தும் கொண்டு பாடுகிறாள். அவளது கவலை உன்னை எங்கு உறங்க வைத்தாலும் அது உனக்கு சரிவராது. எனவே

தோள்மேலே தூளி கட்டித்
தொடைமேலே நடைபழக்கி
மார்மேலே தூங்க வைத்து
மடிமேலே தவழ விட்டேன்

தனது நெஞ்சிலேயே தனது மகனைச் சுமந்து வளர்க்கும் முறையினைப் பாடுகிறாள். சங்கு, இரும்பு இவையெல்லாம் வேண்டாம் என வெள்ளிப்பாலாடை வாங்கி வந்தேன் உனக்குக் பால் கொடுக்க ஆனால் அதுவும் வேண்டாம் என் கைகளால் உனக்கு பாலைப் புகட்டுவேன் எனப்பாடி தனது பாசத்தை எல்லாம் வார்த்தைகளால் பாடுகிறாள். தாய்ப்பாசம் என்பது கற்பனைக்கும் அப்பாற்பட்டது. அந்த தாயின் அன்பை இந்தப் பாடல் அழகுற விளக்குகிறது.

# பாடம் – 14

# காஃபித் தோட்டப் பாட்டு

## 14.2 படிப்போம்

### பயிற்சிகள்

#### அ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (ப.எண்.176)

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

#### ஆ) பொருத்துக. (ப.எண்.176)

1. கண்டி – இலங்கை
2. பினாங்கு – மலேசியா
3. ஜனம் – மக்கள்
4. பெண்டு – பெண்கள்
5. கங்காணி – கண்காணிப்பாளர்

#### இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.176)

1. 'காஃபித் தோட்டப் பாட்டு' காஃபித் தோட்டங்களில் பணியாற்றிய மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கிறது.

2. சிங்கப்பூர், மலேசியாவின் பினாங்கு, இலங்கையின் கண்டி போன்ற நாடுகளுக்குக் காஃபித் தோட்டப் பணிகளுக்காக மக்கள் சென்றதாக இப்பாடல் கூறுகின்றது.

3. குஜிலி இலக்கியம் என்பது நாட்டுப்புறப் பாடல் வடிவத்தின் ஒரு வகையாகும்.

4. பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் எளிய மக்களின் வாழ்வோடு கலந்தவை நாட்டுப்புறப்பாடல்கள். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களை வாய்மொழி இலக்கியம் (அ) நாட்டுப்புற இலக்கியம் என்றழைக்கப்படுகின்றன.

5. "பெண்ணே நவமணியே" எனத் தொடங்கும் இப்பாடல் காஃபித் தோட்டத்தில் பணியாற்றும் மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கிறது.

ஈ) பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.176)

1. நவமணி போன்ற பெண்ணே! அன்பானவளே! மயில் போன்றவளே! கண்ணே! கண்மணி போன்றவளே! இலங்கையில் உள்ள கண்டி நகரத்தில் உள்ள காஃபித் தோட்டத்தின் கதையை நீ கேட்பாயாக என் தங்கரெத்தினமே! பொன்னுரெத்தினமே!

   சிங்கப்பூர், மலேசியாவின் பினாங்கு, இலங்கையின் கண்டி போன்ற செழிப்பான நாடுகளுக்குக் கங்காணிகள் எனப்படும் கண்காணிப்பாளர்கள், இந்திய மக்களை ஏமாற்றிக் காஃபித்தோட்டங்களுக்கு அடிமையாகப் பணியாற்றக் கூட்டிச் சென்றனர்.

   கங்காணி கூறிய ஆசைவார்த்தைகளில் ஏமாந்து அன்பான மனைவியையும் குழந்தைகளையும் தம்முடன் அழைத்துச் சென்றனர். அவ்வாறு சென்றவர்களை உண்பதற்கு உணவுகூடக் கொடுக்காமல் கங்காணி துன்புறுத்தினான்.

   பகல் நேரத்தில் பாழடைந்த காஃபித் தோட்டங்களில் மக்கள் பணிபுரிந்தனர். அப்போது, அங்குள்ள இரத்தம் உறிஞ்சும் அட்டைகளால் கடிபட்டுத் துன்புற்றனர்.

   இவ்வாறெல்லாம் பிறர் கூறும்போது எளிதாக எண்ணினேன். ஆனால் இப்போது அக்கொடுமைகளை நானே எதிர்கொள்கிறேன். இவ்வாறான காஃபித் தோட்டக் கதையைக் கேட்டால் கல்லான மனமும் கரைந்துவிடும். இவ்வாறாகக் காஃபித் தோட்டத்தில் பணியாற்றிய மக்களின் துன்பங்கள் கூறப்படுகின்றன.

2. 1. பெண்ணே நவமணியே பிரியமுள்ள மாமயிலே
   கண்ணே என் கண்மணியே தங்கரெத்தினமே – கண்டி
   காஃபித்தோட்டம் கதையைக்கேளு பொன்னுரெத்தினமே!

   2. சிங்கப்பூர் பினாங்கு கண்டி செழிப்பான தேசமென்று
   எங்கும் இந்திய ஜனத்தைத் தங்கரெத்தினமே – கங்காணி ஏமாற்றிக்
   கொண்டுபோறான் பொன்னுரெத்தினமே!

   3. பெண்டு பிள்ளைகளுடன் பிரியத்தோடு போனோர்களை
   உண்ணவுண வில்லாமல் தங்கரெத்தினமே – கங்காணி
   ஓயாமல் வேலைவாங்கிப் பொன்னுரெத்தினமே!

4. பட்டப்பகல் தனிலே பாழடைந்த தோட்டத்திலே
அட்டை கடியினாலே தங்கரெத்தினமே – ஜனங்கள்
அலறித் துடிக்கிறாராம் பொன்னுரெத்தினமே!

5. எல்லோரும் சொல்லுவது என்னமோ என்றிருந்தேன்
கல்லான மனமானாலும் தங்கரெத்தினமே – இந்தக்
கதையைக் கேட்டால் கரைந்திடுமே பொன்னுரெத்தினமே!

## 14.3 படிப்போம்

## தமிழர் கூத்துக் கலைகள் – பொம்மலாட்டம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுதது எழுதுக. (ப.எண்.179)**

1. (அ) மார்ச் 21
2. (இ) முள் முருங்கை மரம்
3. (அ) 9 பேர்
4. (இ) 2

**ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.179)**

1. பொம்மலாட்டத்துக்குப் பயன்படும் பொம்மைகளைக் கல்யாண முருங்கை அல்லது முள் முருங்கை என அழைக்கப்படும் மரத்திலிருந்து செய்கிறார்கள். இந்தப் பொம்மைகள் 45 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை உயரமுடையதாக இருக்கும்.

2. மரத்தாலான பொம்மைகளை நூலால் கட்டித் திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி கதை சொல்லப்படும். பொம்மையை இயக்குபவர் திரைக்குப் பின்னால் இருப்பார். அவர் பார்வையாளர்களுக்குத் தெரிய மாட்டார். மேலும் கீழும் அசைத்தல், பக்கவாட்டில் அசைத்தல் என இருவகைகளில் பொம்மைகள் இயக்கப்படும். உயிரற்ற பொம்மைகள் உயிர் பெற்றுத் திரைக்கு முன்னே ஆடிப்பாடி, பேசும் உணர்வில் பார்வையாளர்களை ஒன்றச் செய்வதே இக்கலையின் நிகழ்த்து முறையாகும்.

3. பொம்மலாட்ட அரங்கம் 4 மீட்டர் அகலம், 6 மீட்டர் நீளம், 3 மீட்டர் உயரம் இருக்கும். முன்புறத்தில் 1 மீட்டர் இடைவெளி விட்டு கறுப்புத் திரைச்சேலை ஒன்று கட்டப்பட்டிருக்கும். மூன்று புறங்கள் அடைக்கப்பட்ட அரங்கில் இந்தக் கலை நிகழ்த்தப்படும். திரைக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கும் பொம்மலாட்டக் கலைஞர்களின் தலையை மறைக்கும் அளவுக்கு உயரமாக இருக்கும். பொம்மைகள் தொங்குவதற்கான கயிறுகள் கறுப்புத் திரையின் மேல் கட்டப்பட்டிருக்கும்.

### இ) பின்வரும் வினாவிற்கு விரிவாக விடை எழுதுக.

1. மரபைப் பின்பற்றி நிகழ்த்தப்படும் கலைகளுள் ஒன்று பொம்மலாட்டம். ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் 21ஆம் நாள் உலக பொம்மலாட்ட நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

   பொம்மலாட்டம் என்பது மரத்தாலான பொம்மைகளை நூலால் கட்டித் திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி கதை சொல்லும் ஒரு சுவையான நிகழ்வு. இதனை மரப்பாவைக் கூத்து, தோல் பாவைக்கூத்து, பாவைக்கூத்து என்றெல்லாம் அழைப்பர்.

   பொம்மலாட்டத்துக்குப் பயன்படும் பொம்மைகளைக் கல்யாண முருங்கை அல்லது முள் முருங்கை என அழைக்கப்படும் மரத்திலிருந்து செய்கிறார்கள். இந்தப் பொம்மைகள் 45 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை உயரமுடையதாக இருக்கும். பொம்மலாட்ட அரங்கம் 4 மீட்டர் அகலம், 6 மீட்டர் நீளம், 3 மீட்டர் உயரம் இருக்கும். முன்புறத்தில் 1 மீட்டர் இடைவெளி விட்டு கறுப்புத் திரைச்சேலை ஒன்று கட்டப்பட்டிருக்கும். மூன்று புறங்கள் அடைக்கப்பட்ட அரங்கில் இந்தக் கலை நிகழ்த்தப்படும்.

   பொம்மலாட்டத்தில் மொத்தமாக 9 கலைஞர்கள் பங்கேற்பார்கள். இவர்களில் 4 கலைஞர்கள் பொம்மைகளை இயக்குவார்கள். மற்ற 4 கலைஞர்கள் இசைக்கலைஞர்களாக இருப்பார்கள். ஒருவர் உதவியாளராக இருப்பார். ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், ஜால்ரா, முகவீணை ஆகிய இசைக்கருவிகள் இக்கலை நிகழ்த்தலுக்குப் பயன்படுத்தப்படும்.

   பொம்மையை இயக்குபவர் திரைக்குப் பின்னே இருப்பார். அவர் பார்வையாளர்களின் கண்களுக்குத் தெரிய மாட்டார். மேலும் கீழும் அசைத்தல், பக்கவாட்டில் அசைத்தல் என இருவகைகளில் பொம்மைகள் இயக்கப்படும். உயிரற்ற பொம்மைகள் உயிர் பெற்றுத் திரைக்கு முன்னே ஆடிப்பாடி, பேசும் உணர்வில் பார்வையாளர்களை ஒன்றச் செய்வதே இக்கலையின் சிறப்பு ஆகும். பொம்மலாட்டத்தில் இதிகாசம் மற்றும் புராணக் கதைகள், சரித்திரக் கதைகள் அதிகம் நிகழ்த்தப்படுகின்றன.

## 14.4 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.183)**

1. (ஆ) ஊர் உறங்கியது
2. (அ) தொழிலாகு பெயர்

**ஆ) பொருத்துக. (ப.எண்.183)**

1. தானியாகு பெயர் – தேநீரை இறக்கு
2. சினையாகு பெயர் – தலைக்கு நூறு ரூபாய் கொடு
3. எண்ணல் அளவை ஆகுபெயர் – ஆளுக்கு நூறு கொடு
4. கருவியாகு பெயர் – வீணைகேட்டு மகிழ்ந்தாள்

**இ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.183)**

1. ஒரு சொல் தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளைக் குறிப்பதை ஆகுபெயர் என்பர். எனவே ஒரு சொல்லின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொன்றிற்கு ஆகி வருவதே ஆகுபெயராகும்.
   சான்று:
   உலகம் சிரித்தது.
   என் பள்ளி வென்றது.

2. முகத்தல் அளவை ஆகுபெயர்
   திரவப் பொருளை முகந்து அளப்பது முகத்தல் அளவை ஆகும்.
   ஒரு முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.
   ஐந்து லிட்டர் வாங்கி வா.
   அளவைக் குறிக்காமல் திரவத்தைக் குறித்தது.

3. கருவியாகு பெயர்
   ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆகும் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.
   புல்லாங்குழல் கேட்டு மகிழ்ந்தாள்
   புல்லாங் குழலைக் குறிக்காமல் இசையைக் குறித்தது.

## 14.5 கருத்து விளக்கப் படம்

### வினாக்கள் – விடைகள் (பக்கம் எண்: 184)

1. உணவுத்திருவிழா
2. சென்னை
3. சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை – 69
4. சென்னை, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் 23.08.2023 புதன் கிழமை அன்று நடைபெறுகிறது
5. இயற்கை – காட்டுயிர் இதழ் மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழகம் இணைந்து இவ்விழாவை நடத்துகிறது.

## 14.6 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள் – விடைகள் (பக்க எண்: 185)

1. தஞ்சாவூர் ஓவியக்கலை கடவுள்களின் உருவங்களை வரைவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.
2. மூச்சிமார்கள்
3. இரண்டாம் சரபோஜி மன்னர்
4. இயற்கையானவை
5. 2007 ஆம் ஆண்டு

## 14.7 மொழிபெயர்ப்போம் (பக்கம்எண்: 186)

ஒரு நாட்டின் கலை மற்றும் பண்பாடு அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், பண்பாட்டுப் பாலமாகவும் திகழ்கின்றன. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை முதலிய கலைகளின் வாயிலாகச் சமூகத்தையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ளலாம்.

A country's art and culture are a great tool for reflecting that society. Art is not only for entertainment, but also as a medium of information and a cultural bridge. We can learn about society and culture through the arts such as architecture, sculpture, painting, music, and poetry.

## 14.9 உயர்நிலைத் திறன்

**அரிச்சந்திரனின் கதையைத் தெரிந்துகொள்ள, கீழ்க்காணும் தொடர்களை வரிசைப்படுத்துக.**

- அரிச்சந்திரன் நீதியும் நேர்மையும் கொண்ட மன்னன். அவன் தன் வாழ்நாள் முழுவதும் பொய் கூறாமல் வாழ்ந்தான்.
- விசுவாமித்திரர் என்ற துறவி, அரிச்சந்திரனின் நேர்மையைச் சோதிக்க விரும்பினார்.
- தனது கனவில் வந்த அரிச்சந்திரன், நாட்டைத் தனக்குத் தந்துவிட்டதாக விசுவாமித்திரர் கூறினார்.
- விசுவாமித்திரர் கூறியதைக் கேட்ட அரிச்சந்திரன் அவருக்கே தன் நாட்டைக் கொடுத்துவிட்டான்.
- ஒரே ஒரு பொய் கூறினால் போதும், அவன் இழந்தவை அனைத்தும் அவனுக்கே கிடைத்துவிடும்.
- ஆனால், அரிச்சந்திரன் தன் உயிரேபோனாலும் பொய் கூறுவதை விரும்பவில்லை.
- பொய் கூற விரும்பாத அரிச்சந்திரன், தன் நாட்டை மட்டுமின்றி மனைவியையும் மகனையும் இழந்தான்.
- இறுதியில் அவனது நேர்மையை அறிந்த விசுவாமித்திரர், அவனை வாழ்த்தி, அவன் இழந்தவற்றை மீண்டும் அளித்தார்.
- இந்தியாவின் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள், தம் வாழ்நாளில் பொய் கூறாமல் வாழ்ந்ததற்கு அரிச்சந்திரன் கதை நிகழ்வே காரணம் எனக் கூறினார்.
- அரிச்சந்திரனின் நேர்மையும் பொய் கூறாத பண்பும் இந்தியப் பண்பாட்டு விழுமியத்திற்கு இன்றும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

## மீள்பார்வை

**1) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (பக்க எண் : 188)**

1. மணநூல்
2. கண்
3. கவிதை
4. வலைப்பூ
5. வாய்மொழி

**2) கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக. (பக்க எண் : 188)**

1. கல்வி.
2. வணிகம்
3. இடுகை
4. பட்டினப்பாலை.
5. தெருக்கூத்து

**3) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா, தவறா எனக் குறிப்பிடுக. (பக்க எண் : 188)**

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

**4) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்க எண் : 189)**

1. தமிழ் இலக்கியங்கள் கூறும் கல்வியின் சிறப்பைக் காண்போம்.

   மனித உயிர்க்குக் கண்ணாகக் கருதப்படுவது கல்வியே என்பதைத் திருவள்ளுவர் திருக்குறளில் குறிப்பிடுகிறார்.

   கண்களாகப் போற்ற வேண்டிய கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர். ஆகவே தன் ஆசிரியருக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில் அதைத் தீர்க்க உதவி செய்ய வேண்டும்.

பணிவோடு நடந்துகொள்ளுதல் வேண்டும். நற்செயல்கள் அனைத்தையும் கடைப்பிடித்து, வெறுப்பின்றிக் கல்வியைப் பெறவேண்டும் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

கற்க வேண்டிய நூல்களை முழுமையாகக் கற்றுத் தேர்ந்தவர்களே அறிவுடையார் எனப்படுகின்றனர். அவ்வாறு கற்றோர் உலகின் எப்பகுதிக்கும் எளிமையாகச் செல்ல முடியும். கற்றோர்க்கு எல்லா நாடும் தம்நாடு போன்றதேயாகும். கல்வி கற்றோர் வழியில் உண்பதற்கு உணவுகூடக் கொண்டுசெல்ல வேண்டியதில்லை எனப் பழமொழி நானூறு கல்வி கற்றோரின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளது.

ஒரு நாட்டின் அரசரையும் குற்றம் நீங்கக் கற்றோரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கற்றோரே அரசரைக் காட்டிலும் சிறப்புடையவர். அரசருக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு இருக்கும். கற்றோருக்குத் தன் நாடு மட்டுமன்றி அவர்கள் செல்லும் எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டாகும் என்று மூதுரை குறிப்பிடுகிறது.

சமுதாயத்தை மேம்படுத்தும் ஆற்றல் உடையது கல்வி. புறத்தோற்றத்தில் வெளிப்படும் அழகெல்லாம் அழகல்ல. 'கல்வி கற்றதனால் நான் நற்பண்பு உடையவன்' எனக் கருதும் மனநிலையே ஒருவருக்கு அழகு என்று நாலடியார் குறிப்பிடுகிறது. இவ்வாறாக தமிழ் இலக்கியங்கள் பலவும் கல்வியின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.

2. உவமைக்கவிஞர் என்று அழைக்கப்படுவர் கவிஞர் சுரதா.

3. மனம் கவர்ந்த நூல் – ஆசிரியர் – நூலின் அமைப்பு – நூலின் சிறப்பு – எனக்குப் பிடித்த இடங்கள்.

4. முதலீடு என்று வந்துவிட்டாலே அதற்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் பார்க்கப்படுபவர் வாரன் பஃபெட். உலகின் மிகப் பெரும் பங்கு முதலீட்டாளர், புத்தக எழுத்தாளர், சமூக ஆர்வலர் எனப் பல முகங்கள் இவருக்கு இருக்கின்றன. இவர் 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஒமாஹா என்ற இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் வாரன் எட்வர்ட் பஃபெட். சிறு வயதில் ஒமாஹா நூலகத்தில் இருந்த 'ஒன் தௌசண்ட் வேஸ் டு மேக் 1000 டாலர்' (One thousand ways to make $1000 ) என்ற புத்தகத்தால் ஈர்க்கப்பட்டார். தனது 11ஆவது வயதிலேயே பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டார். அப்போது 'சிட்டீஸ் சர்வீஸ்' என்ற நிறுவனத்தின் பங்குகளை வாங்கினார். உலகின் பெரிய பணக்காரர் வரிசையில் இவரின் பெயரும் இடம்பெறும் அளவிற்கு உயர்ந்துள்ளார்.

5. நடன அரங்கில் மூன்று வகையான திரைச்சீலைகள் அமைக்கப்படும். அவை ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி ஆகியனவாகும். அரங்கின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லும் ஒருமுக எழினி. அரங்கின் இருபுறத்திலிருந்தும் நடுவில் பொருந்துமாறு அமைக்கப்படும் பொருமுக எழினி. மேலிருந்து கீழே இறங்கும் வகையில் அமைக்கப்படும் கரந்துவரல் எழினி. இவ்வாறான மூன்று திரைச்சீலைகளும் நடன அரங்கில் அமைக்கப்பட்டிருந்தன.

### 5) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (ப.எண்.189)

1. (இ) மார்ச் 21
2. (ஆ) இண்டிகா
3. (ஆ) கண்காணிப்பாளர்
4. (ஈ) 95%
5. (அ) ஒருமுக எழினி

### 6) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (ப.எண்.189)

1. சந்தி பெரும்பாலும் முதனிலை (பகுதி)க்கும் இடைநிலைக்கும், இடையில் வரும். பகுதி விகுதிக்கு இடையிலும் சில நேரங்களில் வரக்கூடும்.
   சான்று : நடத்தல் – நட +த் + தல் இதில் 'த்' சந்தியாகும். (ப.எண்.115)

2. ஒரு சொல் தனித்து வந்து பொருளைத் தந்தால் அது தனிமொழி எனப்படும்
   சான்று : செல், போ, கண், மரம். (ப.எண்.128)

3. ஒரு பொருளைச் சுட்டுவதற்கு எந்தச் சொல் இயல்பாக அமைகிறதோ அச்சொல் இயல்பு வழக்குச் சொல் எனப்படும். இயல்பு வழக்கு மூன்று வகைப்படும் அவை இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ. (ப.எண்.165)

4. பொருளாகு பெயர் என்பது, முதல் பொருளின் பெயர் அதனொடு தொடர்புடைய இன்னொரு (உறுப்பு) பொருளுக்கு ஆகி வருதல் ஆகும். சான்று: மல்லிகை சூடினாள். (மல்லிகை பூவைக் குறிக்காமல் பூவைச் சூடிக் கொண்ட பெண்ணைக் குறித்தது). (பக்க எண்: 180)

5. பண்பாகு பெயர் என்பது, ஒரு பண்பின் பெயர், அப்பண்பையுடைய பொருளுக்கு ஆகி வருவது ஆகும். சான்று : வீட்டிற்கு வெள்ளை அடித்தான். (பண்பைக் குறிக்காமல் சுண்ணாம்பைக் குறித்தது). (பக்க எண்: 180)

### 7) கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக. (ப.எண்.190)

1. வாழ்ந்தான் = வாழ் + த் (ந்) + த் + ஆன்
   வாழ் – பகுதி
   த் – சந்தி ; த் (ந்) ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை
   ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி (பக்க எண்: 113)

2. மூவகைகள் 1) தனிமொழி , 2) தொடர்மொழி , 3) பொதுமொழி என்பவை ஆகும்.

   தனிமொழி
   ஒரு சொல் தனித்து வந்து ஒரு பொருளைத் தந்தால் அது தனிமொழி எனப்படும்.
   (எ.கா) செல், போ, கண், மரம்

   தொடர்மொழி
   தனிமொழிகள் பல தொடர்ந்து வந்து பொருளைத் தந்தால் அது தொடர்மொழி எனப்படும்.
   (எ.கா) அறம் செய், அறநூல் படி, இன்சொல் கூறு, பண்பு காட்டு

   பொதுமொழி
   ஒரு சொல்லே தனிமொழியாக நின்று ஒரு பொருளையும், தொடர்மொழியாகப் பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்தால் அது பொதுமொழி எனப்படும்.

   (எ.கா) வேங்கை

   வேங்கை என்னும் ஒரு சொல், தனிமொழியாக நின்று புலி என்னும் விலங்கைக் குறிக்கும். வேங்கை என்னும் சொல்லை வேம் + கை என்று பிரித்தால் 'வேகின்ற கை' என்னும் தொடர்மொழியாக நின்று கையைக் குறிக்கும். (பக்க எண்: 128)

3. திணை, பால் – விகுதிகள்

| திணை | உயர்திணை | ஆண்பால் | விகுதிகள் | சான்று |
|---|---|---|---|---|
| | | | அன் | ஒருவன் |
| | | | ஆன் | நாட்டான் |
| | | | மான் | கோமான் |
| | | | ன் | பிறன் |
| | | பெண்பால் | அள் | வந்தனள் |
| | | | ஆள் | அடியாள் |
| | | | இ | குள்ளி |
| | | | ள் | பிறள் |
| | | பலர்பால் | அர் | தோழியர் |
| | | | ஆர் | தேசத்தார் |
| | | | இர் | மகளிர் |
| | | | ர் | பிறர் |
| | | | மார் | தாய்மார் |
| | | | கள் | அரசர்கள் |
| | அஃறிணை | ஒன்றன் பால் | து | அது |
| | | பலவின் பால் | அ | நல்லன |
| | | | வை | நல்லவை |
| | | | கள் | மரங்கள் |

4. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள். (ப.எண்.152)

தொழிற்பெயர் என்பது செயலைக் குறிக்கும். வினையாலணையும் பெயர் என்பது செயலைச் செய்தவரைக்குறிக்கும்.

இவ்விரண்டிற்கும் உள்ள ஒற்றுமை இரண்டும் வினைச் சொற்கள்.
சான்று: 'முருகனுக்குத் தொழில் எழுதுதல்', –தொழிற்பெயர்.
'எழுதியவன் பரிசு பெற்றான்'– வினையாலணையும் பெயர்

வினையாலணையும் பெயருக்கும் தொழிற்பெயருக்கும் உள்ள வேற்றுமைகள்

| வ. எண் | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1 | தொழிலுக்குப் பெயராக வரும் | தொழிலைச் செய்த கருத்தாவிற்குப் பெயராக வரும் |
| 2 | படர்க்கை இடத்தில் மட்டும் வரும் | மூவிடத்திலும் வரும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) |
| 3 | காலம் காட்டாது | காலம் காட்டும் |
| 4 | திணை, பால், எண், இடம் காட்டாது | திணை, பால், எண், இடம் காட்டும். |

5. பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொல்லை நீக்கித் தகுதியான வேறு சொல்லால் சொல்வது தகுதி வழக்கு ஆகும். தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி.

இடக்கரடக்கல்

பிறரிடம் கூறுவதற்கு இடர்ப்பாடாகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால், அப்பொருளைக் குறிப்பிடுவதை இடக்கரடக்கல் என்பர்.

சான்று– 'மலம் கழுவி வந்தேன்' என்பதைக் 'கால் கழுவி வந்தேன்' எனக் கூறுவர்.

மங்கலம்

மங்கலம் அல்லாத சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது மங்கலம் என்பர்.

சான்று – 'செத்தார்' என்பதை 'துஞ்சினார்' என்றும் 'இறைவனடி சேர்ந்தார்' என்றும் கூறுவர்.

குழூஉக்குறி

ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும் வகையில், ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயரைக் குழூஉக்குறி என்பர்.

சான்று – பொற்கொல்லர் 'பொன் (தங்கம்)' என்பதைப் 'பறி' என்று கூறுவர்.

(பக்க எண்: 166&167)

**8) பொருத்துக. (ப.எண்.190)**

1. எழுதுதல் – தொழிற்பெயர்
2. விடுவான் – வினைமுற்று
3. நடித்தவன் – வினையாலணையும் பெயர்
4. கேடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்
5. கொதி – முதனிலை தொழிற்பெயர்

**9) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை எழுதுக. (ப.எண்.190)**

1. Gems – இரத்தினங்கள்
2. Borders – எல்லைகள்
3. Scholar – கற்றோர்
4. Ignorance – அறியாமை
5. Innovative – புதுமை
6. Fragrance – நறுமணம்
7. Silver coins – வெள்ளி நாணயங்கள்
8. Harbour – துறைமுகம்
9. Pioneer – முன்னோடி
10. Puppet show – பொம்மலாட்டம்

**10) கீழ்க்காணும் பழமொழிகளைச் சரியான சொல் கொண்டு நிரப்புக – ப.எண்.190**

1. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
2. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
3. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
4. கனவில் கண்ட பணம் கைச்செலவிற்கு உதவாது.
5. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.

**11) கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத இணை எது ? ப.எண்.191**

3. தலைக்குப் பத்து ரூபாய் கொடு – காலவாகு பெயர்

12) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. – ப.எண்.191

1. படுக்கை.

2. ஆஸ்திரியா நாட்டின் தலைநகரமான வியன்னாவில் உள்ளது.

3. ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்த ஊர் கொடுமணல். இவ்வூர் சங்க இலக்கியத்தில் 'கொடுமணம்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் சங்ககாலம் முதலே வெளிநாட்டவர் பலரும் கூடும் பெரும் வணிக நகரமாக இருந்துள்ளது. கொடுமணலில் குதிரை வணிகம் பெருமளவு நடைபெற்றிருப்பதை இங்குக் கிடைக்கும் சான்றுகள் புலப்படுத்துகின்றன. கார்னீலியன், அகேட், ஜாஸ்பர், பெரில் முதலான அரியவகை மணிகள் இங்கு ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை உரோமானியர்களே பெருமளவில் விரும்பிப் பயன்படுத்தியுள்ளனர். உரோம் நாட்டு நாணயங்கள், கருப்பு சிவப்பு நிறம் கொண்ட சங்ககாலத்தைச் சேர்ந்த பானைகள். நிகம, வியாகி போன்ற பிறமொழி எழுத்துகள் பொறித்த பானைச் சில்லுகள் கிடைத்துள்ளன.

4. தப்பு என்னும் தோலிசைக் கருவியை அடித்து இசையெழுப்பி அதற்கேற்ப ஆடும் ஆட்டம் தப்பாட்டம் எனப்படும்.

5. 19ஆம் நூற்றாண்டின் கடைசியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வெளியான வெகுசன இலக்கியம் 'குஜிலி இலக்கியம்'. தொடக்கத்தில், மக்கள் தங்களின் துயரங்களை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட ஓர் ஊடகமே குஜிலி இலக்கியம். குஜிலி இலக்கியம், 'பெரிய எழுத்துப் புத்தகங்கள்', 'காலணா', 'அரையணா பாட்டுப் புத்தகங்கள்', 'தெருப்பாடல்கள்' என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது. குஜிலி என்ற பெயர் குச்சிலி என்ற பெயரிலிருந்து திரிபாக வந்ததாகும். இந்தப் பாடல்களில் எழுதியோர், பாடியோர் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. சென்னையின் கானாப் பாடல்களின் முந்தைய வடிவமே குஜிலிப் பாட்டு.

13) பின்வரும் உரைப்பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

1. Libraries often provide quiet areas for studying, and they also often offer common areas to facilitate group study and collaboration. Libraries often provide public facilities for access to their electronic resources and the Internet.

நூலகங்கள் படிப்பதற்கு நல்ல அமைதியான இடங்களை வழங்குகின்றன, மேலும் அவை குழு படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன. நூலகங்கள் பொதுமக்களுக்குப் பெரும்பாலும் அவற்றின் மின்னணு வளங்கள் மற்றும் இணையத்தை அணுகுவதற்கான பொது வசதிகளையும் தருகின்றன.

2. An environment variable is a user−definable value that can affect the way running processes will behave on a computer. Environment variables are part of the environment in which a process runs.

சுற்றுச்சூழல் மாறி (environment variable) என்பது ஒரு கணினியில் இயங்கும் செயல்முறைகளின் நடத்தையைப் பாதிக்கக்கூடிய ஒரு பயனர் வரையறுக்கப்பட்ட மதிப்பாகும். சுற்றுச்சூழல் மாறி என்பது செயல்முறை இயங்கும் சுற்றுச்சூழலின் ஒரு பகுதியாகும்.

3. As the Tamil Nadu was surrounded by sea on two sides, Tamils were naturally engaged in seafaring and shipping. Also lived in coastal weaving lands. They lived by going to the sea daily to catch fish: therefore going to the sea was a natural occupation for the Tamils since ancient times.

தமிழ்நாடு இரண்டு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருந்ததால், தமிழர்கள் இயல்பாகவே கடல்வழிப் பயணத்திலும், கப்பல் போக்குவரத்திலும் சிறந்து விளங்கினர். மேலும் அவர்கள் கடலோர நெய்தல் நிலங்களிலும் வாழ்ந்தனர். நாள்தோறும் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வாழ்ந்தனர்; எனவே, பண்டைய காலங்களிலிருந்து கடலுக்குச் செல்வது தமிழர்களுக்கு இயற்கையான ஒரு தொழிலாக இருந்தது.

4. Beginning in the 20th century AD, Pudukavithai appeared in Tamil literature and became a masterpiece. The verse poems written by Bharathi were the forerunners of new poetry in Tamil. The development of Tamil literature and the demand that came with it gave rise to Pudukavithai.

கி.பி 20 ஆம் நூற்றாண்டில் தொடங்கிய புதுக்கவிதை தமிழ் இலக்கியத்தில் ஒரு தலைசிறந்த படைப்பாக மாறியது. பாரதி எழுதிய வசன கவிதைகள் தமிழில் புதுக் கவிதைகளின் முன்னோடிகளாக இருந்தன. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியும் தேவையும் புதுக்கவிதையின் உயர்வுக்கு வழிவகுத்தன.

5. Tamil literature has a rich and long literary tradition spanning over two thousand years. The oldest extant works show signs of maturity, suggesting a still longer period of evolution.

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான ஒரு வளமான மற்றும் நீண்ட இலக்கிய மரபைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள மிகப் பழமையான படைப்புகள் அதன் பழைமைத் தன்மையைக் காட்டுகின்றன. மேலும் அதன் நீண்ட பரிணாம வளர்ச்சியைக் குறிக்கிறது.

**14) பின்வரும் விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**
**வினாக்கள் – விடைகள் (ப.எண்.192)**

1. சுதந்திர தினவிழாவை முன்னிட்டு கொடியேற்ற நிகழ்வு
2. பாரதக் கூத்து நாடகம்
3. நிகழ்ச்சி சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 15.08.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் நடைபெறுகிறது
4. தேனிசைக் குழுவினர்.

**15) பின்வரும் வினாவிற்கு உம் சொந்தக் கற்பனையில் விடை எழுதுக.**

அ) 'கும்மிப்பாட்டு' வடிவத்தில் எட்டு அடிகள் கொண்ட நாட்டுப்புறப் பாடல் ஒன்றினை இயற்றுக.

அழகுத் தமிழ் எங்கள் தமிழ் என்று கும்மியடி
ஆசையாய் படிப்போம் தமிழ் என்று கும்மியடி
இனிய சொற்கள் பேசுவோம் என்று கும்மியடி
ஈகை குணம் நம்மை காக்கும் என்று கும்மியடி
எளிய வாழ்க்கை வாழ்வோம் என்று கும்மியடி
ஏற்றப்பாட்டு எங்கும் தேவை என்று கும்மியடி
உறவு போற்றி காப்போம் என்று கும்மியடி
ஊருக்குப் பொது குளம் தேவை என்று கும்மியடி

ஆ) 'வியத்தகு தகவல்தொழில்நுட்பம்' என்னும் தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**முன்னுரை**

இயற்கை காட்டிய வழிமுறையின் அடிப்படையில், மனிதனின் ஆறாம் அறிவை பயன்படுத்தி, அறிவியல் மூலம் பெற்றுள்ளதே இன்று மனிதகுலம் பல வகைகளில், பல்வேறு வழிகளில் பயன்படுத்துகின்ற தகவல் தொடர்பு வழிமுறைகளாகும். குகைகளை வீடாகப் பயன்படுத்திய காலம் முதல் விண்ணிலே வீடமைத்து வாழும் வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலம் வரையிலும் மட்டுமல்லாது, நிலவில் குடியேறிய பிறகும்கூட மனித குலத்தின் அடிப்படைத் தேவையாகத் திகழப்போவது தகவல் தொடர்பு மட்டுமே ஆகும்.

**தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் :**

இரண்டு இடங்களை இணைத்து, அங்குள்ளவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்திகளை வெளிப்படுத்தும் வழிமுறை மற்றும் அதற்கான கருவிகளுக்குத் தகவல் தொடர்பு சாதனங்கள் என்று பெயர். முதலில் ஓவியங்கள், தூது விடுதல் போன்ற பழங்கால தொடர்பு சாதனங்கள் மாற்றம் அடைந்து, அச்சுத்துறை, அஞ்சல் முறை என்ற தொடர்பு முறைகள் பயன்படுத்தப்பட்டன.

**மின்சாரம் தந்த அறிவியல் கருவிகள்**

மனிதகுலத்திற்கு அறிவியல் கொடுத்த மிகப்பெரிய பரிசு மின்சாரம் என்ற சக்தியாகும். அறிவியல் என்பது மட்டுமல்லாது எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்படும் கருவிகள் அனைத்தும் அநேகமாக இந்த மின்சாரம் என்ற சக்தியின் வழியே செயல்படும் விதத்திலேயே உருவாக்கப்படுகின்றன. இன்றைக்கு தொலைத் தொடர்பு என்பதில் பயன்படுத்தப்படும் கருவிகள், வழிமுறைகள் அனைத்திற்கும் அடிப்படை இந்த மின்சாரம் என்பதுவே என்றால் அது மிகையில்லை. வானொலி மற்றும் தொலைக் காட்சி, தொலைபேசி மற்றும் தொலைக் கருவிகள், கணினி, இணையம், இணையம் வழங்கும் வசதிகள் போன்ற பல்வேறு தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வளர்ச்சியுற்று தற்போது செல்பேசிகள் தான் உலகை ஆளுகின்றன.

**செல்லும் இடமெல்லாம் செல்பேசிகள்**

வளர்ந்த நாடு, வளரும் நாடு என எல்லா நாட்டு மக்களும் பயன்படுத்தும் தொழில் நுட்பமாக உள்ளது "செல்பேசி" எனும் சின்னஞ்சிறு கருவியாகும். ஆனால் மிக

வேகமாக மாற்றம் கண்ட இந்தத் தொழில்நுட்பம் இன்று செல்பேசிகளின் உருவத்தை மட்டுமல்லாது, செலவையும் குறைத்து விட்டது. ஆனால் நடைமுறையில் இன்று செல்பேசி என்ற இந்தச் சின்னஞ்சிறிய கருவியானது, தொலைபேசி வசதிக்காக மட்டும் பயன்படுத்துவது என்பது மாற்றம் அடைந்து பலவகையிலும் பயன்படுத்தப்படுகிறது.

**தலைமுறைகள் கடந்த தொழில்நுட்பங்கள்**

மனித வாழ்க்கை முறையில் ஒரு தலைமுறை என்பது 30 ஆண்டுகளைக் குறிக்கும். ஆனால் தற்போதைய மின்னணுத் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒரு தலைமுறை என்பது பத்து ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தை, இன்னும் சரியாகச் சொல்லப்போனால் 3 முதல் 5 ஆண்டுகளை மட்டுமே குறிக்கின்றது என்றே சொல்லலாம்.

**முடிவுரை**

குகைச் சுவற்றில் படமாக வரைந்து தகவல் தெரிவித்த மனிதன் இன்று செல்லும் இடம் எல்லாம் எளிதாகத் தொடர்பு கொள்ளும் செல்பேசிக் கருவியை பயன்படுத்துகின்றான். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு கண்டுபிடிப்பு என்பது மாறி, 100, 50, 10, 4, 1 ஆண்டுகளாகச் சுருங்கி இன்று தினந்தோறும் ஏதேனும் ஒரு கண்டுபிடிப்பு அறிமுகம் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாற்றம் ஒன்றே மாற்றம் இல்லாதது என்பார்கள். ஆனால் இன்று அறிவியல் வளர்ச்சியால் அந்த மாற்றமும் மாறுபட்டு அமைகிறது என்பது நம்கண் முன் தெரிகிறது.